கோகுலம்

GOKULAM

ஜூன் 2001 ரூ.6/-




அறிமுகம்
நவீன
வடிவில்
ரிங்-
தேள்கள்,
சிலந்திகள்,
மூட்டைப்பூச்சிகள்,
பல்லிகள்...
பயமூட்டும் ரிங் பிரான்கிஸ்!
FREE!
PRANKIES
இச்சலுகை 32 கிராம் ரஸ்னா ஸாஃப்ட்
டிரிங் கான்சன்ட்ரேட் பேக்குகளுக்கு
மட்டுமே கிடைக்கும் இருப்புக்கள் தீரும்
வரையே இச்சலுகை. இச்சலுகை
இல்லாமலும் பேக்குகள் கிடைக்கின்றன
Rasna
ORANGE
NEW
Rasna
RICHER
THICKER
TASTIER
ORANGE
32
NEW



இனிய மணத்தாலும், கண்கவர் வண்ணத்தாலும் உங்களை ஈர்க்கும் பூக்கள் : போஸ்டர் - 40

"ஒன்று தின்றுவிட்டேன். பசிக்கிறது. இன்னொன்றும் திங்கலாமா?" என்று தயாளன் கேட்க பூதம் பயந்து நடுங்கியது! - 28

'வரம் கொடுத்தவர் தலையிலேயே கை வைப்பது' என்ற உவமையைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அது இந்தக் கதையில் இருந்துதான் உருவானது - 68



விண்வெளியில் பிரபஞ்சங்கள், பால்வழி மண்டலங்கள், விண்மீன்கள், நமது சூரிய குடும்பம் அனைத்தும் அடங்கியுள்ளன. கோள்கள் உருவாகி எவ்வளவு கோடி ஆண்டுகள் ஆகின்றன தெரியுமா? - 12



பாராசூட்டைப் பற்றி அறிந்திருப்பீர்கள், பார்த்திருப்பீர்கள். ஆனால் உயிருள்ள பாராசூட்டை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா? - 8



கோகுலம்

மலர் : 19
இதழ் : 5
ஜூன் 2001





உயிர்களிடத்தில்
அன்பு வேணும்
தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேணும்.
- பாரதியார்.

வேலுச்சாமிக்குச் சிறிது நிலம் இருந்தது. அதில் உழுது பயிரிட்டு வரும் வருமானத்தை வைத்து வாழ்க்கை நடத்திக் கொண்டு வந்தான். அவன் மனைவி வீராயி கடினமான உழைப்பாளி. வயலிலிருந்து வரும் வருமானம் சாப்பாட்டுக்குத்தான் சரியாய் வரும். மற்ற அன்றாட செலவுகளுக்கும், பண்டிகை, விழா போன்றவற்றுக்கும் வீராயிதான் சமாளிக்க வேண்டும். எனவே அவள் வீட்டில் ஆடு வளர்த்து விற்பாள். கோழி வளர்த்து முட்டைகளை விற்பாள். மாடு வளர்த்து பால் வியாபாரமும் செய்தாள். காலையில் 5 மணிக்கு எழுந்ததிலிருந்து மாடு, கன்றுகளைப் பார்த்து, பிள்ளைகளைக் கவனித்து சமையல் செய்வது என இரவு படுக்கும்வரை பம்பரமாய்ச் சுற்றுவாள். வேலுச்சாமி வயலை மட்டும் கவனித்துக் கொள்வான். வீட்டிலே மனைவிக்கு உதவியாக ஒரு துரும்புகூட அசைக்கமாட்டான். சில சமயங்களில் வயலிலே களை எடுக்க, கதிர் அறுக்க வீராயியும் கூடப்போக வேண்டியிருக்கும். வேலுச்சாமிக்கு வீட்டைப் பற்றியோ, வீட்டின் பொருளாதாரம் பற்றியோ கொஞ்சம் கூட கவலையில்லை. வாய்க்கு ருசியாக சாப்பிட்டுவிட்டு வம்பு பேசித் திரிவான். மேலும் குழம்பு சரியில்லை. பொரியல் சரியில்லை என்று மனைவியிடம் சண்டை போடுவான். எனவே வீராயி தனக்கும் பிள்ளைகளுக்கும் கஞ்சியும், துவையலும் வைத்தாலும் வேலுச்சாமிக்கு ஒரு குழம்பும் ஒரு பொரியலும் வைத்து விடுவாள்.

அன்று வீராயிக்கு உடம்பு சரியில்லை. வெளியே போய் காய் வாங்க முடியாமல் கஞ்சி மட்டும் காய்ச்சி வைத்திருந்தாள். வேலுச்சாமி வெளியே போய் விட்டு வந்து சாப்பிட உட்கார்ந்தான். கஞ்சியையும் ஊறுகாயையும் பார்த்துவிட்டு அவனது கோபம் தலைக்கு மேல் ஏறியது. "மனுஷன் சோறு திங்கணுமா, வேண்டாமா?"- இரைந்தான். "எனக்கு உடம்பு சொகமில்லை நாளைக்கு நல்லா செஞ்சிறேன்" என்றாள் வீராயி.

"ம்! வர வர உனக்குத் திமிரு அதிகமாயிட்டே போகுது. உன்னோட குடித்தனம் பண்றதைவிட எங்காவது காட்டுக்குப் போய் சாமியார் ஆயிடலாம்"- கோபத்தோடு எழுந்து போனான்.


"ஐயோ! போகாதீங்க"- குறுக்கே வந்தாள் வீராயி.



தவிக்கும் தயிர் சாதமும்!

“நான் போறதுன்னு முடிவு பண்ணிட்டேன் என்னை யாரும் தடுக்க முடியாது'' முறுக்கிக் கொண்டான் வேலுச்சாமி.

“ஐயோ! வாய்க்கு ருசியா சாப்பிட்டவராச்சே! காடு போய் சேருகிறவரைக்கும் என்ன பண்ணுவீங்க? கொஞ்சம் இருங்க, தயிர் சோறு தரேன், வழிக்கு ஆகும்''



என்றாள் வீராயி.

''சீக்கிரம் செய்!'' வேலுச்சாமி திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

சமையலறையில் ஏதேதோ சத்தம் கேட்டது. 'சொய்' என்று தாளிக்கும் சத்தத்துடன் இனிய மணமும் கலந்து வந்தது. வேலுச்சாமி மூச்சை இழுத்து வாசனையை நுகர்ந்தான். 'பரவாயில்லை மணக்க மணக்க செய்கிறாள். இன்னைக்கு ராத்திரிக்குக் காட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் முதல்ல தயிர் சாதத்தைச் சாப்பிடணும்' என்று நினைத்துக் கொண்டான்.

சிறிது நேரத்தில் ஒரு பெரிய தூக்குச் சட்டியைக் கொண்டு வந்து கொடுத்தாள் வீராயி. “ம்! நீங்க திரும்பி வரமாட்டீங்க. மாடு, கன்றுகளோடு வயலையும், நான்தான் பார்த்துக்கணும். முக்கால் வாசி வேலை நான் பார்த்தேன். கால்வாசி வேலை நீங்க பார்த்தீங்க. இனிமேல் முழு வேலையும் எனக்குத்தான். இந்த வீராயி வேலைக்குப் பயந்தவ இல்ல. பார்த்துப் போயிட்டுவாங்க. தயிர் சாத்த்துக்கு மோர் மிளகாய் சுட்டு வைத்திருக்கேன்'' என்றாள்.

மோர் மிளகாய் என்றதுமே வேலுச்சாமியின் நாவில் எச்சில் ஊறியது. “ம்! சரி, கொடு'' என்று பாத்திரத்தை வாங்கி, ''நான் போறேன்'' என்று சொல்லிக் கொண்டு வாசலில் இறங்கி நடக்க ஆரம்பித்தான். மாங்காய், இஞ்சி பொடியாக நறுக்கிப் போட்டு, பச்சை மிளகாய் வெட்டிப் போட்டு புளிக்காத தயிரில் சிறிது பெருங்காயத் தூளைப் போட்டு, கொத்தமல்லி தழையை நறுக்கிப் போட்டு வீராயி செய்யும் தயிர் சாதம் வேலுச்சாமிக்கு மிகவும் பிடிக்கும். அதற்கு ஏற்ற மாதிரி சுட்ட மோர் மிளகாய் வேறு.

ஊரைத் தாண்டி காடு போய்ச் சேரும் வரைக்கும்கூட பொறுக்கவில்லை.

ஊர் எல்லையிலிருந்த மண்டபத்தில் உட்கார்ந்து ஆசையோடு பாத்திரத்தைத் திறந்தான் வேலுச்சாமி. உள்ளே பார்த்ததும் திடுக்கிட்டான். பாத்திரம் நிறைய தவிடுதான் இருந்தது. ஆர்வ மிகுதியில் பசி வேறு பயங்கரமா எடுத்தது. ஆத்திரத்தோடு வீட்டுக்கு ஓடி வந்தான். “தயிர் சாதம்னு சொல்லி தவிட்டையா வெச்சே?” வீராயியை அடிக்கக் கையை ஓங்கினான்.

“கொஞ்சம் பொறுங்க! முதல்ல சாப்பிடுங்க. பிறகு பேசுங்க” என்று சொல்லி அவனுக்குத் தயிர் சாதத்தைக் கொண்டு வந்து பரிமாறினாள் வீராயி. சாப்பிட ஆரம்பித்தான் வேலுச்சாமி.


“சாதாரண தயிர் சாதத்தைக்கூட உங்களாலே மறக்க முடியல. நீங்க எப்படி பொண்டாட்டி, பிள்ளைகளை மறந்து சாமியாராப் போக முடியும்? கஷ்டப்படும்போது ஒருவருக்கொருவர் ஆதரவா இருந்து கஷ்டங்களைப் பகிர்ந்து வாழ்க்கையை செழிப்பாக வைக்கணுமே தவிர ஓடிப் போய் ஒளிஞ்சிக்கக்கூடாது.” என்றாள் வீராயி.

அன்றிலிருந்து வேலுச்சாமி தன் சோம்பேறித் தனத்தைக் கைவிட்டு வீராயிக்கு உதவி செய்ய ஆரம்பித்தான்.

- சு. சௌம்யாயனி,
ஏழாம் வகுப்பு, புனித அலாய்சியஸ்
மகளிர் மேல்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி.


முட்டை ஓட்டில் கோழி!

தேவையான பொருட்கள்: முட்டை ஓடு, சிறிய அட்டை, மஞ்சள், சிவப்பு, வெள்ளைத் தாள்கள், ஸ்டிக்கர் பொட்டு, ஃபெவிக்கால்.



எப்படி செய்யலாம்?

முட்டை ஓட்டின் ஓட்டை உள்ள பகுதியைச் சமமாக வெட்டிக் கொள்ளுங்கள். வெட்டிய இடத்தில் ஃபெவிக்கால் தடவி சிறிய அட்டையின் மீது செங்குத்தாக இருக்கும்படி ஒட்டுங்கள். வெள்ளைத்தாளில் வால் மற்றும் இறகு ஆகியவற்றைப் படத்தில் காட்டியபடி வெட்டி வைத்துக் கொள்ளுங்கள். சிவப்புத் தாளில் கொண்டை மற்றும் தாடியையும் மஞ்சள் தாளில் அலகையும் வெட்டுங்கள். படத்தில் காட்டியபடி ஒவ்வொன்றையும் அதனதன் இடத்தில் ஒட்டுங்கள். இரண்டு ஸ்டிக்கர் பொட்டுகளைக் கண்களாக ஒட்டி விட்டால் அழகான கோழி ரெடி.



— சு. துர்கா காத்யாயனி,
தூத்துக்குடி

அம்பேத்கார் சதாராவில் தாம் படித்த பள்ளி ஆசிரியர் ஒருவரிடம் பிரியா விடை பெற்றார். அந்த ஆசிரியர் அம்பேத்காரை அணைத்துக் கொண்டார்.

தீண்டத்தகாத ஒருவன் படிப்பில் தீவிரமாக இருப்பதா? என்று சதாரா பள்ளியில் அனைத்து ஆசிரியர்களும் அம்பேத்காரை வெறுத்தொதுக்கிய நிலையில் அம்பேத்காரிடம் அன்பு காட்டிய உண்மையான ஆசிரியர் அவர் ஒருவர்தான். அம்பேத்கார் சோர்வடைந்த போதெல்லாம் அறிவுரை வழங்கினார். அம்பேத்காரின் பாடங்களில் சந்தேகம் போக்கினார். 'உன்னைப் போன்றவர்கள் நன்கு படித்து உயர்பதவியை வகிக்க வேண்டும். அப்போதுதான் ஜாதி வெறியின் தீண்டாமைப் பேயை இந்த நாட்டில் இருந்து ஒழித்து விட முடியும்' என்று உற்சாகப்படுத்தினார்.



அந்த ஆசிரியரின் திருப்பெயர்தான் 'அம்பேத்கார்' என்பதாகும்.

இந்த ஆசிரியரின் பெயரை தமது இயற்பெயருடன் நன்றி காரணமாக இணைத்துக் கொண்டார் அம்பேத்கார். 'பீமாராவ் ராம்ஜி அம்பேத்கார்' என்று அம்பேத்காரின் பெயர் மாற்றி அமைக்கப்பட்டது.



புத்தகப் பிரியர்!

அம்பேத்கார் பட்டப் படிப்பிற்காக சாயாஜி மன்னரிடம் உதவி கேட்க எண்ணினார்.

அம்பேத்காரை நேரில் காண வேண்டுமென்று சாயாஜி மன்னர் எழுதியிருந்தார். அதனால் அம்பேத்கார் பரோடா புறப்பட்டார். மன்னர் சாயாஜியைச் சந்தித்தார்.


அம்பேத்காரின் அறிவுக் கூர்மையைக் கண்டு மன்னர் வியந்தார். கல்லூரிப் படிப்புத் தொடர உதவிப் பணம் அளிக்கவும் இசைந்தார்.

அம்பேத்கார் கல்லூரிப் படிப்பைத்

பசி தீர்க்க முடியுமா?

கோழி ஒன்று குப்பை மேட்டில் மேய்ந்துகொண்டிருந்தது. அதற்கு ஏகப்பட்ட பசி. மண்ணைக் கிளறி புழு, பூச்சி, தானியம் என்று கிடைத்ததையெல்லாம் கொத்திக் கொத்தி விழுங்கிக் கொண்டிருந்தது. அந்தக் குப்பையில் ஒரு மாணிக்கக் கல் இருந்தது. அதைப் பார்த்ததும் சட்டென்று கோழி கொத்தியது. விழுங்காமல் சிறிது யோசித்தது. பிறகு கல்லென்று நினைத்து தூக்கி எறிந்தது.

தன்னைத் தூக்கி எறிந்ததும் மாணிக்கக்



கல்லுக்கு கோபம் வந்தது. அது கோழியைப் பார்த்து ''அற்ப கோழியே என் மதிப்பு உனக்குத் தெரியுமா? என்னைத் தங்கக் கிரீடத்தில் வைத்து அணிந்து கொள்வார்கள் மனிதர்கள். இப்படி தூக்கி எறிந்துவிட்டாயே'' என்று படபடத்தது.

''உன் பெருமையெல்லாம் எனக்கு எதற்கு? என் பசியைத் தீர்க்க உன்னால் முடியுமா? சிறிய தானியம், பூச்சி, புழுதானே என் பசியைப் போக்குகிறது'' என்று நிதானமாகப் பேசியது கோழி.

மாணிக்கக் கல் அமைதியானது.

நன்றி: ஈசாப் நீதிக்கதைகள்

– ஜி.கே.எஸ். மூர்த்தி

தொடர்ந்தார். 1912 ஆம் ஆண்டு நடைபெற்ற பி.ஏ தேர்வில் மும்பை மாகாணத்திலேயே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார்.

அம்பேத்கார் அமெரிக்காவில் இரவையெல்லாம் பகலாக நினைத்துப் படித்தார். ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரம் உழைத்தார். கல்வியிலேயே கவனம். அறிவிருக்கும் இடம் எல்லாம் தேடித் தேடிப் படித்தார்.

உல்லாசப் பொழுதுபோக்கின் உறைவிடமாகக் கருதப்பட்ட அமெரிக்க நாட்டில், அம்பேத்காருக்குப் பிடித்த இடம் அந் நாட்டின் நூலகங்கள்தான். அடுத்தது நியூயார்க் நகரத்தின் பழைய புத்தகக் கடைகள்.

அம்பேத்கார் படித்த புத்தகங்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி வைத்துப் பார்த்தால் அது ஒரு பச்சைக் கிளி ஒரு நாளைக்குப் பறக்கிற தொலைவைத் தொட்டு விடும். அவர் விலை கொடுத்து வாங்கிய புத்தகங்களை எண்ணிப் பார்த்தால், ஒரு கோடீஸ்வரன் கூடப் புத்தகங்களுக்காக இவ்வளவு தாராளமாகச் செலவு செய்ய மாட்டான் என்றே துணிந்து சொல்லலாம்.

அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியபோது அயல்நாட்டில் சேர்த்து வைத்த அத்தனை புத்தகங்களும் கப்பலோடு கடலில் மூழ்கிப் போயின. (ஏறக்குறைய இரண்டாயிரத்திற்கும் அதிகமான புத்தகங்கள்)

தாம் அரும்பாடுபட்டுச் சேர்த்து வைத்த புத்தகங்களையும் அல்லும் பகலும், அடிக்குறிப்புப் போட்டு வைத்த புத்தகங்களையும் கடலில் இழந்ததை அம்பேத்கார் தமது வாழ்வில் ஏற்பட்ட மிகப் பெரிய விபத்தாகக் கருதினார்.

அவருடைய புத்தகங்களைச் சுமந்து வந்த கப்பல் மூழ்கி விட்டதால் அப்புத்தகங்களுக்கு நஷ்டஈட்டு பணம் கொடுக்கப்பட்டது. அதைக் கொண்டு மேலும் நூல்களே வாங்கினார்!

- சு. கண்ணகி, மிட்டூர்.

கோகுலம் க்விஸ்



1. சிவப்பு புள்ளி உள்ள கோள்?
அ. சனி, ஆ. வியாழன், இ.புதன்

2. பிரிட்டிஷ் பிரதமர்?
அ. ஜார்ஜ் புஷ், ஆ. கிளிண்டன், இ. டோனி பிளேர்

3. ஹாலாந்து நாட்டுக்கு இன்னொரு பெயர்?
அ. போலந்து, ஆ. நெதர்லாந்து, இ. நியூசிலாந்து

4. வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டவர்?
அ. அண்ணா, ஆ. காமராஜர், இ. பெரியார்

5. துரியோதனனின் உடன்பிறந்த தம்பி?
அ. துச்சாதனன், ஆ. நகுலன், இ. சகாதேவன்

6. வெட்டுக்கிளியின் ரத்தம் என்ன நிறம்?
அ. சிவப்பு, ஆ. வெள்ளை, இ. பச்சை

7. சமீபத்தில் இந்தியா அனுப்பிய விண்கலம்?
அ. ஆர்யபட்டா, ஆ. இன்சாட், இ. ஜி.எஸ்.எல்.வி

8. ராஜஸ்தானில் உள்ள பாலைவனம்?
அ. தார், ஆ. சகாரா, இ. அரேபிய பாலைவனம்.

9. ஜப்பானின் தலைநகர்?
அ. டோக்கியோ, ஆ. ஹிரோஷிமா, இ. நாகசாகி

10. சீனாவின் துயரம் என்று அழைக்கப்படும் நதி?
அ. நைல் நதி, ஆ. கங்கை, இ. மஞ்சள் நதி.


மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்து கேள்விகளுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு விடை சரியானது. சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுதி, உங்கள் முழு முகவரியையும் குறிப்பிட்டு, முகவரி கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும்.

கடைசி தேதி 30.6.2001

கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஒரு வருடத்தில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ, அப்பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு சுழல் கோப்பையைக் கைப்பற்ற நிறைய பள்ளிகள் தயாராகி வருகின்றன. உங்கள் பள்ளியும் கோப்பை பெற வேண்டுமா? உடனே படைப்புகளை அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97



உடலை விட நீண்ட வாலுடைய அங்கும் இங்கும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் அணில்களை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். 'கிக், கிக்' என்று சத்தமிட்டபடி சாதாரணமாக வீட்டுக் கூரைகளில், மரங்களில் பார்க்கலாம்.

உடல் வெளிர் சாம்பல் மற்றும் பிரௌன் நிறத்தில் காணப்படும். உடலின் கீழ் பாகங்கள் லேசாக இருக்கும். உடலைச் சுற்றியிருக்கும் முடிகள் தடிப்பானவை. முடி அடர்ந்த நீண்ட வால் உடலை விடப் பெரிதாகக் கூட இருக்கும். கால் நகங்கள் கூரானவை. முதுகில் கறுப்பு வண்ண கோடுகள் உண்டு. கோடு இல்லாத அணில்களும் உண்டு.

மரங்கள், மரப் பொந்துகள்; கருவேல மரங்கள் அடர்ந்த காடுகள் போன்ற இடங்களில் இவை கூடு கட்டி வசிக்கின்றன. புல்வெளிகள் மற்றும் அடர்ந்த காடுகளை இவை பொதுவாகத் தவிர்த்து விடுகின்றன.

தனித்தோ அல்லது சிறு குடும்பமாகவோ வாழும். அணிலுக்கு மோப்ப சக்தி அதிகம். முகர்ந்து பார்த்தே உறவினர்களை அடையாளம் கண்டு கொள்ளும். தனக்குச் சொந்தமான இடத்தில் வேறு எந்தப் பிராணி குறுக்கிட்டாலும் விரட்டி விட்டு இடத்தைக் கைப்பற்றிக் கொள்ளும்.





மரங்களில் வசித்தாலும் உணவு தேடத் தரையிலேயே அதிக நேரத்தைக் கழிக்கும். உணவு தேடும்போது கவனமாக இருக்கும். ஏதாவது ஆபத்து வருவதை உணர்ந்ததும் வாலை வேகமாக ஆட்டி, கத்தி மற்ற அணில்களையும் எச்சரித்து தப்பி ஓடும். தப்பிக்க மரப் பொந்துகள் அகப்படாவிட்டால் மரத்துக்கு மரம் 2 மீட்டர் தூரம் வரை கூடத் தாவிச் செல்லும். ஒளிந்து கொள்ள சரியான பொந்து கிடைத்தால்தான் ஓடுவதை நிறுத்தும்.

இவ்வாறு ஓடும்போதும் தாவும்போதும் அணில் விழாமல் உடலைச் சமநிலைப் படுத்துவது அவற்றின் வால்தான். இது பாராசூட் போல் அணிலுக்கு உதவுகிறது. குளிர்காலத்தில் வாலுக்குள் உடலை வைத்து கதகதப்பாக்கிக் கொள்ளும்.

அணில்கள் பூக்கள், தானியங்கள், விதைகள், இலைகள்,

எஸ். சுஜாதா

பழங்கள், புற்கள், மரப்பிசின், மரப்பட்டைகள் என எதையும் விட்டு வைப்பதில்லை. சில அணில்கள், எறும்புகள், கரையான்கள், பூச்சிகளையும் சாப்பிடுவது உண்டு. குளிர் காலத்துக்கு கடின விதைகள், ஓடு கொண்ட பருப்புகள் ஆகியவற்றை சேமித்து வைக்கும்.

அணில் பாலூட்டி என்றாலும் கூடு கட்டி வாழ்க்கை நடத்தும். கூட்டை தன் வாலிலிருந்து முடிகளை உதிர்த்து மெத்தென்று உருவாக்கிவிடும். இதில் பிறக்கும் அணில் குஞ்சுகளுக்கு கதகதப்பாக இருக்கும்.

பிறந்த குட்டிகள் பார்ப்பதற்கு அழகாக இருக்காது. ஒன்றரை மாதம் ஆன பின்தான் முழு வளர்ச்சி தெரியும். குட்டியை அம்மா நன்றாகக் கவனித்துக் கொள்ளும். இளம் அணில்கள் குட்டி அணில்களை வளர்ப்பதில் பெற்றோருக்கு உதவுகின்றன.

எலிகளைப் போலவே அணில்களும் கொறி விலங்கு இனத்தைச் சேர்ந்தவை. கொறிக்காவிட்டால் பல் தேய்ந்து போகாமல் நீண்டு வளர்ந்து சாப்பிட முடியாமல் போய் விடும். எனவே சதா எதையாவது கொறித்துக்கொண்டே இருக்கின்றன.

அணில்களில் பல வகைகள் உண்டு. பறக்கும் அணில்கள்கூட உண்டு. அவை நம் நாட்டில் இல்லை.

அணிலின் ஆயுட் காலம் ஆறு ஆண்டுகள்.

மரங்களில் உள்ள பழங்களைக் கொறித்துச் சேதப்படுத்தி மனிதர்களுக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகின்றன. ஆனால் இவை காய்களைப் பாழ்படுத்தாது.

ராமரின் கை பட்டதால் அணில்களுக்கு முதுகில் கோடுகள் வந்தது என்பது கட்டுக் கதை. ராமாயண காலத்திற்கு முன்பிருந்தே அணில்கள் பூமியில் வாழ்கின்றன!







உயிருள்ள பாராசூட்!


கோடை விடுமுறைப் போட்டி II


கட்டங்களை நிரப்புங்கள்




இங்கு எட்டுப் படங்கள் உள்ளன. ஒவ்வொரு படமும் 'லை' என்ற எழுத்தில் முடியும். அதற்கேற்றவாறு எதிர்பக்கத்தில் கட்டங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. படத்துக்கு ஏற்ற மாதிரி கட்டங்களை நிரப்புங்கள். முகவரி


















கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். பரிசு ரூ.300/- சரியான விடைகளை எழுதிய 10 பேருக்கு பரிசு பகிர்ந்தளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி: 30.6.2001






ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97.



திறந்தவெளியில் நின்று, நீங்கள் வானத்தையும், அதில் மிதக்கும் மேகங்களையும் பார்த்து ரசித்து, பிரமித்தது உண்டா? அவற்றுக்கு அப்பால் என்ன இருக்கிறது என யோசித்தது உண்டா? நாம் பார்க்கும் வான்வெளி, நம் புவியின் வாயுமண்டலம் மட்டுமே! இதனைத் தாண்டி நம்மால் பார்க்க முடியாத, எல்லையற்ற மிகப் பரந்து விரிந்த விண்வெளி உள்ளது. இது முடிவுறா அளவில் விரிந்து கொண்டே செல்லும் ஒரு வெற்றிடப் பரப்பாகும். விண்வெளியில் பிரபஞ்சங்கள், பால்வழி மண்டலங்கள், விண்மீன்கள், நமது சூரிய குடும்பம் ஆகிய அனைத்தும் அடங்கியுள்ளன. பிரபஞ்சங்களுக்கிடையே உள்ள இடத்தில் காற்று மண்டலம் கிடையாது; அது மட்டுமல்ல



• சூப்பர் நோவா


வெளிச்சமும் கிடையாது. எங்கும் ஒரே இருட்டு. இரவானாலும், பகலானாலும் கூட!

இதில் நமது பிரபஞ்சம் சுமார் 1600 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானது எனக் கருதுகின்றனர். அதிக அடர்த்தியும், மிக அதிக வெப்பநிலையும் கொண்ட நிறை (mass) வெடித்து சிதறியதால் ஏற்பட்டிருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. நம் பிரபஞ்சத்தின் விட்டம் 1000 கோடி ஒளி ஆண்டுகள்!

நமது பிரபஞ்சத்தில் நிறைய பால்வெளி மண்டலங்கள் அல்லது அண்டங்கள் உண்டு. இதில் நமது சொந்த அண்டத்தின் பெயர் பால்வழி மண்டலம் (Galaxy) ஆகும்.

பால்வழி மண்டலத்தை நம்மால் பார்க்க முடியுமா? முடியும். நிலவு இல்லாத அமாவாசை இரவில், மின் விளக்குகளின் ஒளி குறைவாக உள்ள திறந்த வெளியில் நின்று வானத்தை அண்ணாந்து பாருங்கள். நடுவானில் நிறைய விண்மீன்கள் நெருக்கமாய் உள்ள பகுதி தெரியும். இதுவே நமது பால்வழி மண்டலம் ஆகும்.

நமது அண்டமாகிய நம் பால்வழி மண்டலத்தின் வயது சுமாராக 1400 கோடி ஆண்டுகள். இதில் சுமார் 10,000 கோடி விண்மீன்கள் (நம் சூரியனைப் போன்றவையும்,




• பால்வழி மண்டலம்


• பால்வழி மண்டலத்தில்
அம்புக் குறியிட்ட இடத்தில் பூமி உள்ளது

அதைவிடப் பல மடங்கு பெரியவையும் கூட) உள்ளன. இதில் நம் சூரியனும், சூரிய குடும்பமும் சேர்ந்து பால் வழி மண்டலத்தின் (நமது பூமி, சூரியனைச் சுற்றுவது போல்) மைய அச்சை ஒரு முறை சுற்றி முடிக்க 22.5 கோடி ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கால அளவினை விண்வெளி ஆண்டு





ரபஞ்சம்



"பாகற்காய் ஏண்டா கசக்குது?"
"வாயில வச்சு கடிக்கிறதால சார்!"
— காயக்காடு ராமகிருஷ்ணன்

(cosmic year) என்று சொல்கின்றனர். நம் கோள்களுக்குத் துணைக்கோள் இருப்பது போல், நமது அண்டத்திற்கும், பெரிய மெகல்லன் வான்முகில் மற்றும் சிறிய மெகல்லன் வான்முகில் என்ற இரண்டு துணை அண்டங்கள் உள்ளன. இவை நம் அண்டத்தின் ஈர்ப்பு சக்தியால், பால்வழி மண்டலத்தைச் சுற்றி வருகின்றன.

சூரியனைச் சுற்றி 9 கோள்கள், 60க்கும் மேற்பட்ட துணைக்கோள்கள், கோடிக் கணக்கான அஸ்டிராய்டுகள், பாறைகள், எண்ணிலடங்கா வால் நட்சத்திரங்கள் அனைத்தும் நீள் வட்ட கதியில் சுற்றி வருகின்றன. இதில் சில வால் நட்சத்திரங்கள் வழி தப்பிப் போய் விடுவதும் உண்டு. இவை அனைத்தும் சேர்ந்ததுதான் நம் சூரிய குடும்பம் எனப்படும் சூரிய மண்டலம்.

சூரிய நெபுலா வேகமாய் சுழன்று, குளிர்ந்து அதிக அழுத்தத்தில் சுருங்கி சூரியனாய் உருவானது. அதன் பொருட்கள் எல்லாம் அதன் மையப் பகுதிக்குள் இழுக்கப்பட்டன. மையம் அதி அடர்த்தியும், வெப்பமும் உள்ளதாய் மாறியது; மையத்தில் அணுப்பிணைவினால் (அணு உலை போல) வெப்ப சக்தியை உருவாக்கத் துவங்கியது. இதுவே நம் மைய நாயகனான சூரியனார் பிறந்த கதை. சூரியன் உருவானதிலிருந்து தொடர்ந்து அணுப்பிணைவுகள் நடந்து, ஹைடிரஜன் ஹீலியமாக மாறிக்கொண்டே, வெப்ப சக்தியையும், ஆற்றலையும் உமிழ்ந்து கொண்டே இருக்கிறது. அதே நேரத்தில் சூரிய நெபுலாவில் மீதமுள்ள பொருட்கள், வட்டத்தட்டின் மற்ற பகுதிகளில், முக்கியமாய் ஹைடிரஜன் மற்றும் ஹீலியம் இணைந்தும், இன்னும் சில பகுதிகளில் தூசுகள், பாறைகள், உலோகங்கள் மற்றும் பனிக்கட்டிகள் இணைந்தும் கோள்களாக உருப்பெற்றன.

சூரியனுக்கு அருகில் அதனைச் சுற்றி வரும், பாறை மற்றும் உலோகப் பொருட்கள் உள்ளவை 'உட்கோள்கள்' (புதன், வெள்ளி, பூமி, செவ்வாய்) என்றும், பாறை, உலோகங்கள், பனிக்கட்டி மற்றும் வாயுப் பொருட்களை உள்ளடக்கி, சூரியனிலிருந்து வெகு தூரத்தில் உள்ளவை 'வெளிக்கோள்கள்' என்றும் பெயரிடப்பட்டன.

எல்லா கோள்களும் ஒரே நேரத்தில் அல்லது சூரியனைப் போன்று, ஒரே மேகத் திரளிலிருந்து உருவானதாக எல்லா வானவியலார்களும் கருதவில்லை. ஈர்த்துக் கொள்ளும் கொள்கைப்படி உருவான இளஞ் சூரியனைக் கடந்து சென்ற ஒரு பெரிய ராட்சத வாயு மேகம், சூரியனின் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்பட்டது. அப்போது அவை சிறு, சிறு மேகங்களாய் உடைந்து, பின் சுருங்கி அப்படியே கோள்களாயின. கோள்கள் அனைத்தும் கிட்டத்தட்ட 460 கோடி ஆண்டுகளுக்கு முன்னர்தான் உருவாயின. புளூட்டோவைத் தவிர மற்ற கோள்களெல்லாம், சூரியனைச் சுற்றிவரும் வளையத்திலுள்ள பொருட்களிலிருந்தே முதலில் உருவாயின. இந்தக் கோள்கள் உருவான பின், அவை விட்டுச் சென்ற மீதமுள்ள பொருட்களிலிருந்தே புளூட்டோ உருவானது.

கோள்கள் உருவாகும்போது அடர் அண்ட அழுத்தத்தின் காரணமாக பிரபஞ்சத்திலுள்ள வாயு மற்றும் தூசுத் துகள்கள் ஒன்றிணைந்து கோள் துகள்கள் ஆகின்றன. இவை ஒன்றிணைந்து ஒருசில கி.மீ. குறுக்களவுள்ள பெரிய கட்டியாக உருமாறுகின்றன. இவற்றிற்கு 'புரோட்டோ கோள்கள்' (கோள்களின் முதல் நிலை) என்று பெயர். இவை இணைந்து கோள்களாய் மாறின.

செவ்வாய் கிரகத்துக்கும், வியாழனுக்கும் இடையிலுள்ள பாறைகளும், உலோகப் பொருட்களும், 'கோளாக' மாறாமல் வளையமாகவே சுற்றிக் கொண்டிருக்கின்றன. இதற்கு அஸ்டிராய்டு வளையம் என்று பெயர். சூரிய குடும்பத்தில் பெரும்பகுதி வான்வெளி சுற்பாறைகளாகவே சுற்றிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் பனிக்கட்டியும், வாயுக்களும் இணைந்து வால் நட்சத்திரங்களாக உருமாறின.

— மோகனா



''கட்டெறும்பு மாதிரி நம்ம ராமு!''

''அவ்வளவு சுறுசுறுப்பா..''

''இல்லை, எது சொன்னாலும் வெடுக்குனு கடிச்சுடுவானே!''

- காழி. ஆர். சீதாராமன்



''கேக்குத் தாங்க.''

''எனக்கு நல்லா காது கேட்குதுங்க.''

''இல்லை. நான் சாப்பிட கேக் தரச் சொன்னேன்.''

சி. இராஜசேகரன், இராஜபாளையம்

''ஏப்பா மாடு வாங்க லோன் வாங்கினியே, கட்டிட்டியா?''

''தினமும் சாயங்காலம் 6 மணி ஆன உடனே கட்டிப் போட்டுடுவேங்க!''

- விஜயகுமார், சேலம்



சிரிப்போ சிரிப்பு!

''முன்பெல்லாம் டி.வி.யை சவுண்டா வைச்சா, எங்க அம்மா குறைக்கச் சொல்லுவாங்க.''

''இப்போ?''

''சவுண்டா வைச்சா டி.வி.யே 'கொற... கொற'ங்குது!''

- கீரக்களூர் செந்தில்





''ஏம்பா போண்டா சூடா இருக்கா?''

''கொஞ்ச நேரத்துக்கு முந்தி சூடாகத்தான் இருந்துச்சு சார்!''

- ப. கந்தசாமி, திருச்செங்கோடு


விஷம விச்சு
செல்வம்
ஊரிலிருந்து வந்திருந்த மிலிடெரி பெரியப்பா விச்சுவிடம் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தார்.
ராணுவத்துல இருக்கும் போது தினமும் காலையில 20 மைல் ஓடுவேன்!
நான் துப்பாக்கியை எடுத்தால் யாரும் எதிரில் நிற்க மாட்டாங்க.
பீரங்கியில் குண்டு போட்டு எத்தனை எதிரிகளின் விமானங்களை வீழ்த்தியிருக்கேன், தெரியுமா?
அப்பவும் சரி, இப்பவும் சரி, என்னால முடியாததே கிடையாது.
பெரியப்பா ரொம்பத் தற்பெருமை அடிச்சுக்கிறாரே... என்ன பண்ணலாம்?
பெரியப்பா, எவ்வளவு பெரிய ஆள் நீங்க! இந்த ஊசியிலே நூலைக் கோர்த்துக் கொடுங்க.
ஹா... ஹா... இதென்ன பிரமாதம்? கொண்டா இப்படி.
பலமுறை முயன்றும் அவரால் ஊசியில் நூலைக் கோர்க்க முடியவில்லை.
என்ன பெரியப்பா இது. எவ்வளவு பெரிய சாகசமெல்லாம் பண்ணியிருக்கீங்க! இந்த நூலை ஊசியிலே நுழைக்க முடியலையே!

சார் தபால்

ஸ்டாம்ப்களைத் தேடும் கண்கள்!

உறுதி மொழி

விளையாட்டு அரங்கம் பகுதியில் சாதனை வீரர்களைப்படம் பிடித்துக் காட்டி விட்டீர்கள். இதைப் படிக்கும் போது நாமும் ஏன் இவர்களைப் போன்று சாதனை படைக்கக் கூடாது என்று தோன்றியது. உடனே ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற உறுதி மொழியை எடுத்துக் கொண்டேன்.

- இரா. கஜேந்திரன், பதினோராம் வகுப்பு, அ.ஆ.மே.நி.பள்ளி, மகுடஞ்சாவடி.

டாப்!

எங்கள் ஊரில் நடந்தது பகுதியில் இடம் பெற்றிருந்த சம்பவங்கள் அனைத்தும் ரசிக்கும்படி இருந்தது. மொட்டை பாபு கதையும் படமும் டாப். ஓவியப் போட்டியில் இடம் பெற்றிருந்த படங்கள் நன்றாக இருந்தன.

- வி.ஆர். கிருத்திகா, திருச்சி

குஷி

சுவாரசியமான ஹாபி, வியாழன், மரங்கொத்தி ஆகிய கட்டுரைகளில் இடம் பெற்றிருந்த படங்கள் அனைத்தும் சொக்க வைத்துவிட்டன. மஞ்சள் மகிமை விளையாட்டு இந்த விடுமுறையில் எங்களை மிகவும் குஷிபடுத்தி விட்டது.

- கே.சங்கரன், கே.பானுமதி, இளையான்குடி.

ஸ்டாம்ப் தேடுதல்...

சுவாரசியமான ஹாபி கட்டுரையைப் படித்ததும் எனக்கும் ஸ்டாம்ப் சேகரிக்க ஆர்வம் வந்துவிட்டது! வீட்டுக்குத் தபால் வந்ததும் கண்கள் ஸ்டாம்ப்களைத் தேடுகின்றன.

- எஸ்.ராஜா, பன்னிரண்டாம் வகுப்பு, அ.ஆ.மே.நி.பள்ளி, மகுடஞ்சாவடி.

ஆச்சர்யம்!

உங்கள் எதிர்கால வழி காட்டியில் இடம் பெற்றுவரும் ஒவ்வொரு துறையும் முக்கியமானதே. இருந்தாலும் கிரிக்கெட் பற்றி வரவில்லையே என நினைத்துக் கொண்டிருக்கும்போது கிடைத்தது மே இதழ். பிரித்தால் 'கிரிக்கெட் வீரராவது எப்படி?' என்று வந்திருந்தது. ஒரே ஆச்சர்யம்!

- என். சந்திரமோகன், பத்தாம் வகுப்பு, வேலூர்.



உத்வேகம்...


உங்களுடன் ஒரு நிமிடம் பகுதியில் 'மாபெரும் வெற்றியும் மகத்தான தோல்வியும்!' என்று ஆசிரியர் குறிப்பிட்டு எழுதியதைப் படிக்கும் போது புது உத்வேகம் வந்தது. ஹர்பஜன், லக்ஷ்மண் போஸ்டர்களை வழங்கிய கோகுலத்துக்கு நன்றி.

- எஸ். பிரகதீஷ், எட்டாம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, ஆண்டிமடம்.

பத்திரிகையாளராவது எப்படி?



பெரிய தலைவர்களைப் பார்த்து, கேள்வி மழையாகப் பொழியும் பத்திரிகையாளர்களைக் கண்டு நீங்கள் பிரமித்துப் போனதுண்டா? தலைவர்கள் மட்டுமல்ல; பிரபல சினிமா நடிகர்கள், நடிகைகள், விளையாட்டு வீரர்கள் என்று சாதாரணமானவர்கள் சந்திக்கவே முடியாதவர்களைக் கூட மிகச் சுலபமாகச் சந்தித்து, பேட்டி, கட்டுரைகள் எழுதும் வாய்ப்பு பத்திரிகையாளர்களுக்கு மட்டுமே கிடைக்கும். சாலையில் போகும் பாமரனிலிருந்து, சர்வ வல்லமை படைத்த ஜனாதிபதி வரை பத்திரிகையாளர்கள் சந்திக்க வேண்டியிருக்கும். பத்திரிகையாளர் என்றால் திறக்காத கதவும் திறக்கும். நமது நாட்டில் ஜனநாயகம் வலிமையாக இருக்க வேண்டுமென்றால் பத்திரிகையும், பத்திரிகையாளர்களும் சுதந்திரமாக இயங்க வேண்டும். தொலைக் காட்சியில் பேட்டிகள், பத்திரிகையாளர் சந்திப்புக்கள் ஆகியவற்றைப் பார்க்கும் உங்களுக்கு எதிர்காலத்தில் 'நாமும் பத்திரிகையாளராக வர வேண்டும்' என்ற எண்ணம் துளிர்த்தால் அதில் ஆச்சர்யமில்லை! அந்த லட்சியத்தை அடைய வேண்டுமென்றால் அதற்கான சில பண்புகளை சிறுவயதிலேயே வளர்த்துக் கொள்ள வேண்டும்.



ஒரு பத்திரிகையாளனாக வருவதற்கு முதல் தகுதி, அவன் ஒரு நல்ல வாசகனாக இருக்க வேண்டும். எனக்குச் சொந்த ஊர் திருவாரூர். அப்பா வக்கீல் குமாஸ்தாதான். பத்திரிகைகள் வாங்கும் வசதி இல்லை. கிருஷ்ணமூர்த்தி என்று ஒரு வழக்கறிஞர் இருந்தார். அவர் வீட்டில் ஆனந்தவிகடன் வாங்குவார்கள். சனிக்கிழமை காலை அவர் வீட்டிற்குச் சென்று விடுவேன். அட்டை முதல் அட்டை வரை, கிட்டத்தட்ட மனப்பாடம் செய்வது போல் விகடனைப் படித்து முடிப்பேன். 'கள்வனின் காதலி', 'தியாகபூமி' போன்ற 'கல்கி'யின் தொடர்களை நான் விரும்பிப் படித்தபோது எனக்கு வயது பத்துதான். பிற்காலத்தில் ஒரு பத்திரிகையாளனாக வருவதற்கு நல்ல அடித்தளமாக அது அமைந்து விட்டது. எனவே சிறுவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது



பத்திரிகையாளர் பால்யு



படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள் என்பதுதான். பிரமிப்பூட்டும் கற்பனைக் கதைகளைப் படியுங்கள். இதன் மூலம் கற்பனை வளம் பெருகும்.

எனது பதின்மூன்றாவது வயதில் எங்கள் குடும்பம் மயிலாடுதுறைக்கு வந்து விட்டது. அங்குள்ள நகராட்சி உயர் நிலைப் பள்ளியில் தான் படித்தேன். பள்ளி நூலகத்திலேயே பழியாய் கிடப்பேன். எனது நண்பன் காளிதாஸும் நானும் சேர்ந்து 'பாரதமாதா' என்று ஒரு கையெழுத்துப் பத்திரிகை நடத்தினோம். காளிதாஸ் அந்தப் பத்திரிகையை 'கல்கி' அவர்களிடம் காட்டி 'பேஷ்...பேஷ்' என்ற பாராட்டையும் பெற்று வந்தான். மாயவரத்தில் இருக்கும் போதுதான் விகடன் தவிர கலைமகள், நாரதர், சக்தி, ராம கிருஷ்ண விஜயம் போன்ற பத்திரிகைகளும் படிக்கக் கிடைத்தன. பத்திரிகைகள் தவிர வை.மு. கோதைநாயகி, வடுவூர் துரைசாமி அய்யங்கார் ஆகியோரது நாவல்களும் அந்த வயதிலேயே படித்து முடித்தேன். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால் கையில் கிடைக்கும் எல்லா புத்தகங்களையும் படிக்க வேண்டும். அதன் மூலம் கிடைக்கும் தகவல்கள், வங்கியில் இருக்கும் சேமிப்பு போன்றது.

இப்போதெல்லாம், அரசியல், சினிமா, விளையாட்டு என்று ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி பத்திரிகையாளர்கள் இருந்தாலும் இன்றைய நிலையிலும், சில பத்திரிகைகளில் பணிபுரியும் பத்திரிகையாளர்கள் சூரியனுக்குக் கீழே இருக்கும் எல்லா விஷயங்களைப் பற்றியும் எழுத வேண்டியதாக இருக்கிறது. எனவே பிரபலமாக உள்ள எல்லோரைப் பற்றியும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் உண்டாகிறது.



புதிய கண்டுபிடிப்புகள் பல்வேறு துறைகளில் நடந்துள்ள சாதனைகள், அதற்குப் பொறுப்பானவர்கள் என்று சகல விஷயங்களையும் ஒரு பத்திரிகையாளர் அறிந்து வைத்திருக்க வேண்டும். இதற்குச் சிறந்த வழி, நாளிதழ்களைப் படிக்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதுதான். பிரபலமானவர்களைப் பற்றிய செய்திகள் வரும்போது அதை வெட்டியெடுத்து தனி கோப்புப் போட்டுப் பாதுகாத்து வரலாம். இப்படி செய்தீர்களானால் காலப் போக்கில் பல

ஒரு விஷயத்தின் சாதக, பாதகங்களை நண்பர்களோடு கலந்து அலசுவது அறிவை வளர்க்கும்.

தலைவர்களின் ஜாதகம் உங்களுக்குக் கிடைத்து விடும். அந்தத் தலைவர் ஏதாவது செய்தியில் அடிபடும்போது அவரது கடந்த காலத்தைத் தெரிந்து கொள்ள சேமித்து வைத்த செய்திகள் உதவும். இப்படி மனிதர்களைப் பற்றி மட்டுமல்லாமல், கட்சிகள் மற்றும் பல்வேறு பிரச்னைகளைப் பற்றியும் பேப்பர் கட்டிங்குகள் எடுத்து அட்டவணைப் போட்டுப் பாதுகாத்து வைத்துக்கொள்வது ஒரு பத்திரிகையாளனுக்கு மிகவும் அவசியம். பள்ளியிறுதி வகுப்பு படிக்கும் நிலையிலேயே இந்தப் பழக்கத்தைத் துவங்கலாம்.

இப்போதெல்லாம் படிப்பதை விட பார்க்கும் பழக்கம் அதிகமாகிவிட்டது. அதில் ஒன்றும் தவறில்லை. தொலைக்காட்சிகளில் பேட்டிகள், கலந்துரையாடல்கள் என்று தற்போது நிறையவே வருகின்றன. அவற்றைப் பாருங்கள். பேட்டியாளர் கேள்விகளையும் அதற்கு பேட்டி கொடுப்பவர் தரும் பதில்களையும் அசைபோடுங்கள். 'அதைக் கேட்காமல் விட்டுவிட்டாரே' என்று ஒரு புது விஷயம் உங்கள் மூளையில் தட்டுப்படும். பத்திரிகையாளர்களாக வர விருப்பமுடையவர் வளர்த்துக் கொள்ள வேண்டிய மற்றொரு பழக்கம் விவாதம் செய்வது. ஒரு விஷயத்தின் சாதக, பாதகங்களை நண்பர்களோடு கலந்து அலசுவது அறிவை வளர்க்கும். தொலைக்காட்சியில் இப்போது பல போட்டிகள் வருகின்றன. அதில் ஆர்வமுடன் கலந்து கொள்ளுங்கள்.

சில வருடங்களுக்கு முன்னர் பத்திரிகைகளில் வாசகர் கடிதங்கள் எழுதியவர்களும் கேள்வி-பதில் பகுதிக்குக் கேள்வி கேட்டவர்களும் இன்று பிரபல பத்திரிகைகளில் பணிபுரிகிறார்கள். நாட்டு நடப்புகளை உன்னிப்பாகக் கவனித்து வந்தது அவர்களுக்கு ஒரு ப்ளஸ் பாயிண்ட்டாக அமைந்து விட்டது.

ஒரு சுற்றுலாத் தலத்துக்குச் செல்கிறீர்கள். திரும்பி ஊருக்கு வந்ததும் அந்த ஊரில் உங்களை பிரமிக்க வைத்த விஷயம் குறித்து ஒன்றிரண்டு பக்கம் எழுதுங்கள். அதை மற்றவர்களிடம் படிக்கக் கொடுங்கள். படித்தவர்கள் சொல்லும் குறைகளைத் திருத்திக் கொள்ளுங்கள். ஒரு திரைப்படத்திற்குச் சென்று வந்தால் அந்தப் படத்தைப் பற்றிய விமர்சனத்தை எழுதிப் பாருங்கள். முதலில் நாம் எழுதுவது நமக்கே பிடிக்காமல் இருக்கும். ஆனால் எழுதியதை படித்து,

100 பேருக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசு!

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளுக்கான போட்டி. இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் வழங்க இருக்கிறோம். போட்டியில் கலந்து கொள்வதுடன் விரைவில் அனுப்பியும் வைக்க வேண்டும்.

இந்த மாதப் போட்டி:

பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?

மேற்கண்ட மாவட்டங்களுக்கு இத்துடன் போட்டி முடிவடைகிறது. போட்டியில் கலந்து கொள்ளுங்கள்! பரிசை வெல்லுங்கள்!



படித்து, திருத்தி எழுதிப்பார்க்கும் போது, சுவாரஸ்யமான எழுத்து உங்கள் ஆளுகைக்குள் வரும். பட்டை தீட்ட தீட்ட வைரம் ஜொலிப்பதைப் போன்ற விஷயம்தான் இது. பள்ளியில் நடத்தும் கட்டுரைப் போட்டிகளில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

மயிலாடுதுறை பள்ளியில் நான் படிக்கும்போது, ஒரு விழாவுக்கு சர்வ பள்ளி ராதாகிருஷ்ணன் வந்திருந்தார். அந்த விழாவைப் பற்றி எழுத பத்திரிகையாளர் நாடோடியும் வந்திருந்தார். அவர் நேருவைப் போல ஷெர்வானியும், கோட்டும் அணிந்திருப்பார். தோளில் காமிரா மாட்டிக் கொண்டிருப்பார். அந்த உடை அவருக்கு மிகவும் எடுப்பாக இருந்தது. விழாவில் பந்தாவாக அங்கேயும் இங்கேயும் சென்று எல்லோருடனும் மிக சகஜமாக பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து எனக்கும் பத்திரிகையாளனாக வர வேண்டும் என்ற ஆர்வம் ஊற்றெடுத்தது. பிறகு பள்ளியிறுதி வகுப்பு முடித்ததும் சென்னைக்கு வந்துவிட்டேன். கல்கியில் ஓவியராக இருந்த ரசாக், உதவியாசிரியராக இருந்த சோமாஸ்கந்தன் ஆகியோரது நட்பு கிடைத்தது. எனக்குள் இருந்த ஆர்வத்திற்கு உரம் போட்டவர்கள் அவர்கள். கல்கியில் முதல் ஜோக் வெளியானது. அதைத் தொடர்ந்து நிறைய சிறுகதைகளும் எழுதினேன். ஒரு முழுப் பத்திரிகையாளனாக என்னை உருவாக்கியவர் அமரர் எஸ்.ஏ.பி. அவர்கள். ஒரு குருகுல வாசம் போல, பத்திரிகைத் துறையின் பல்வேறு பரிமாணங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அவரால் தான் கிடைத்தது. எனக்குக் கிடைத்ததைப் போன்ற வாய்ப்பு ஆர்வமுள்ள எல்லோருக்கும் கிடைப்பது அரிது.

கையில் கிடைக்கும் எல்லா புத்தகங்களையும் படிக்க வேண்டும். அதன் மூலம் கிடைக்கும் தகவல்கள், வங்கியில் இருக்கும் சேமிப்பு போன்றது.


ஓவியப் போட்டி

வடதுருவத்தில் வெண்பனியில் அசைந்து, அசைந்து செல்லும் பெங்குவின்களை டீ.வி.யிலோ அல்லது புத்தகங்களிலோ பார்த்திருப்பீர்கள் அல்லவா? இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு 'பெங்குவின்'. படம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முழு முகவரியைத் தரவும்.

கடைசி தேதி: 20.6.2001

ஒரு பத்திரிகையாளனுக்கு அடிப்படையாக இருக்க வேண்டியது கேள்வி கேட்கும் மனப்பாங்குதான். 'ஏன், எதற்கு, எப்படி, எதனால், யார்' என்று கேட்கத் துவங்கினால் ஒரு பிரச்னையின் பின்னணி தெரிய வரும். எந்தக் காரணம் கொண்டும் உண்மைக்கு மாறாக எதையும் எழுதக் கூடாது. இப்போதெல்லாம் பத்திரிகையாளர் துறையில் பட்ட மேற்படிப்பு கூட, பல்வேறு பல்கலைக் கழகங்களில் இருக்கிறது. எனவே முறைப்படி படித்து, பட்டம் பெற்று பிரபல பத்திரிகைகளில் பணியாற்றும் வாய்ப்பைப் பெறலாம். இளமைப் பருவத்திலிருந்தே சில பண்புகளை வளர்த்துக் கொண்டு கூடுதலாக கல்வித் தகுதியையும் பெற்றுக் கொண்டால் உங்களில் பலர் எதிர்காலத்தில் சிறந்த பத்திரிகையாளர்களாக வரக்கூடும். பெஸ்ட் ஆப் லக்!

தொகுப்பு: **ப்ரியன்**
படங்கள்: **ராஜன்**



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ப்ரியா, பிரசாத் போல் நீங்களும் உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கோகுலத்தை அன்பளிப்பாக வழங்கலாமே! கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

பள்ளிக்கூடம் திறந்தால் சுதந்திரம் போய்விடுமா?

தேர்வுகள் முடிந்து நீண்ட நாட்கள் விடுமுறை. இந்த விடுமுறையில் உறவினர்கள் வீட்டுக்குச் சென்றது, புத்தகம் படித்தது, டி.வி. பார்த்தது, சுற்றுலா சென்றது, கொளுத்தும் வெயிலில் கிரிக்கெட் விளையாடியது, பொழுது போகாமல் அம்மாவை நச்சரித்தது என்று பல வழிகளில் பொழுது போயிருக்கும்.

இப்பொழுது ஜூன் மாதம் வந்து விட்டது. கல்விக் கூடங்களுக்கு இது தான் ஆண்டு துவக்கம். காலையில் சிக்கிரமாக எழுந்து, படித்து, பறந்து கொண்டு பள்ளிக்கூடம் போகிற டென்ஷன்கள் இல்லாமல் விடுமுறையில் இருந்துவிட்டு பள்ளி திறக்கிறது என்றால் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் வாழ்க்கை என்பது வெறும் பொழுது போக்குகளில் மட்டும் அடங்கி விடுவதில்லையே.

நம் நாட்டு கல்வித் திட்டத்தில் குறைபாடுகள் இருப்பது உண்மைதான். இதில் ஆசிரியரையோ மாணவர்களையோ குறை சொல்ல முடியாது. கல்வித் திட்டமே மாற வேண்டும். ஆசிரியர்களின் அணுகு முறைகளிலும் மாற்றம் வேண்டும். பாடங்களும் கஷ்டமாக இருந்து, பாடத்தை நடத்துபவர்களும் கடுமையாக நடந்து கொண்டால் மாணவர்களுக்குக் கல்வி மேல் ஆர்வம் குறைந்து பயம் அதிகரித்து விடுவது உண்மை.

விடுமுறை முடிந்து பள்ளிக் கூடத்துக்கு வரும் மாணவர்கள் பெரும்பாலும் புது வகுப்பு, புது ஆசிரியர், புது உடை, புதுப் புத்தகங்கள், புதுப் பாடங்கள் என ஒவ்வொரு விஷயத்திலும் நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும்தான் அடியெடுத்து வைக்கிறார்கள். ஆனால் இந்த ஆர்வம் தொடர்கிறதா?

விமலா ஏழாம் வகுப்பு மாணவி. ஓரளவு நன்றாகப் படிக்கக் கூடியவள். குறும்பும் செய்வாள். பள்ளி திறந்த முதல்







நாள் அறிவியல் ஆசிரியர் வர தாமதமானது. எல்லோரும் சக தோழிகளிடம் பேசிக் கொண்டிருக்க விமலா எழுந்து போய் கரும்பலகையில் 'பள்ளிக்கூடம் திறந்தாச்சு; சுதந்திரம் போயாச்சு!' என்று எழுதி விட்டுத் திரும்பினாள். ஆசிரியர் நின்று கொண்டிருந்தார். விமலாவுக்குப் பயம் வந்தது. அப்படியே நின்றாள். ஆசிரியருக்கு விமலா நன்றாகப் படிக்கக் கூடியவள் என்றெல்லாம் தெரியாது. ஒரு நிமிடத்துக்குப் பின் ஆசிரியர் "உங்களுக்கு மட்டுமா சுதந்திரம் போச்சு, எங்களுக்கும் தான்!" என்றார் சிரித்தபடி. விமலா மன்னிப்புக் கேட்க, ஆசிரியர் 'இதில் ஒண்ணும் தப்பில்லை. உண்மை'தானே என்றார். வகுப்பு மாணவிகள் ஆசிரியரை வியப்புடன் பார்த்தனர். உண்மையிலேயே அந்த ஆசிரியர் சற்று வித்தியாசமானவர். மாணவர்களின் ஆர்வத்தைத் தெரிந்து கொண்டு எல்லோருக்கும் புரியும் வண்ணம் விளையாட்டுப் போக்கில் பாடம் நடத்துவார். தன்னிடம் யாரும் எப்பொழுது வேண்டுமானாலும் சந்தேகம் கேட்க அனுமதித்திருந்தார். வகுப்பில் பாடத்தை மட்டும் நடத்தாமல் பொது அறிவு, விளையாட்டு என நேரத்தை ஒதுக்கியிருந்தார். எனவே அந்த ஆசிரியரை வகுப்பில் உள்ள அனைவருக்கும் பிடித்துப் போனதில் வியப்பில்லையே!

குணா எட்டாம் வகுப்பு மாணவன். சுமாராகப் படிப்பவன். கணக்கு என்றால் கொஞ்சம் சிரமப்படுவான். எட்டாம் வகுப்பிற்கு வரும் கணித ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். தவறாகக் கணக்குப் போட்டால் காது, தொடை எது கிடைக்கிறதோ அதைப் பிடித்துத் திருகி விடுவார். இரண்டு நாளைக்கு ஒரு ஸ்கேல் உடைந்து போய் கட்டுப்படியாகாததால் தினமும் 'ஒரு மாணவன் நல்ல குச்சி உடைத்து வரவேண்டும். இதனால் ஏற்கனவே கணிதத்தின் மீது கொஞ்சம் இருந்த ஆர்வமும் குணாவுக்கு இல்லாமல் போனது. பயத்தால் தெரிந்த கணக்குகளைக் கூட உளறிக் கொட்டித் திட்டு வாங்குவான்.

ஆசிரியர்கள் இந்தக் கணித ஆசிரியர்களைப் போல் இல்லாமல் விமலாவின் அறிவியல் ஆசிரியர் போல் இருக்க வேண்டும். மாணவர்களுக்கு வழி காட்டியாகவும், தோழமையோடும் பழக வேண்டும். மாணவர்களும் அன்றன்று நடத்தும் பாடங்களை அன்றே படித்து, சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டு வந்தால் ஆசிரியர்களை மட்டுமின்றி பரீட்சையையும் எளிதில் எதிர் கொள்ளலாம்.

ஆசிரியர்கள் கற்பிப்பதை கற்கண்டாக நினைத்தால் மாணவர்களும் கற்பதை கற்கண்டாக நினைப்பார்கள்.

ஆண்டின் துவக்கத்திலிருந்தே திட்டமிட்டு படித்தால் ஆசிரியர்களுக்கோ, பரீட்சைக்கோ வீணாகப் பயப்படத் தேவையில்லை. வாழ்த்துகள்!

அட்டையில் : **பத்மாவதி**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

பறக்கும் வண்ணப்பூ!



சிட்டுப் போலப் பறந்துமே
சிகரம் தாண்டிச் செல்லும் பூ!
வட்ட மிட்டு நிறங்களால்
வான வில்லை வெல்லும்பூ!

முட்டை மூலம் பிறந்துமே
முழுவ ளர்ச்சி கொள்ளும்பூ!
கட்டை மீது அமர்ந்துமே
காணும் மனத்தைக் கிள்ளும்பூ!

தொட்டுப் பார்க்க நெருங்கினால்
தூரச் சென்று குந்தும்பூ!
விட்டு விட்டுச் சுருங்கியே
விரிந்து காட்டும் விந்தைப்பூ!

சொட்டுத் தேனை அருந்தியே
சுற்றித் திரியும் வண்ணப்பூ!
பட்டில் ஆடை அணிந்ததோர்
பட்டாம் பூச்சி என்னும்பூ!


தளவை. இளங்குமரன்,
செங்கற்பட்டு



எங்கள் பள்ளியில் நடந்தது!

நீல்டவுன்

நான் ஆறாம் வகுப்பில் படிக்கும் போது, எங்கள் ஆங்கில ஆசிரியர் ஒரு



மாணவனை 'பியூட்டிபுல்' என்ற ஆங்கில வார்த்தையை உச்சரிக்கச் சொன்னார். அவனால் சரியாக உச்சரிக்க முடியவில்லை. திரும்பத் திரும்ப சொல்லிக் கொடுத்தார். அவன் தவறாகவே உச்சரித்தான். கோபமடைந்த ஆசிரியர், அவனை 'மண்டி'யிடச் செய்யும் பொருட்டு 'நீல் டவுன்' என்றார். அவனோ ஆசிரியர் வேறு வார்த்தையை உச்சரிக்கச் சொல்லுகிறார் என்று நினைத்து "நீல்டவுன்" என்று சரியாக உச்சரித்தான். வகுப்பறை சிரிப்பொலியில் மிதந்தது.

- பெ. நடராசன், எட்டாம் வகுப்பு,
சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம்
மாவட்டம்.

எதிர்ச்சொல் என்ன?

அன்று தமிழ்ப் பாடவேளை. ஆசிரியர் பயிற்சி இலக்கணம் பகுதியை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது, பல்வேறு சொற்களுக்கு எதிர்ச்சொல் கூறிக் கொண்



டிருந்தார். நீதி, சாதாரணம், நியாயம், தர்மம், ஜாக்கிரதை போன்ற சொற்களுக்கு எதிர்ச் சொல், அநீதி, அசாதாரணம், அநியாயம், அதர்மம், அஜாக்கிரதை என்று சொன்னார். அப்போது, என் குறும்புக்கார தோழி, திடீரென எழுந்து, ஆசிரியரிடம் "'மோகம்' என்பதற்கு எதிர்ச்சொல் 'அமோகம்' தானே. அமோக விளைச்சல் என்கிறார்களே அது இது தானே?" என்று கேட்க ஆசிரியர் உட்பட வகுப்பே சிரித்தது.

- ஏ.எல்.ராவியாகனி,
காரைக்கால்.

குவாக்... குவாக்...

நான் கிராமத்துப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு முறை மாவட்ட கல்வி அதிகாரி வருகை தந்திருந்தார். ஒவ்வொரு வகுப்பாக அவர் பார்த்துக் கொண்டு வந்தார். எங்கள் வகுப்பில் ஆங்கில பாடவேளை நடந்து கொண்டிருந்தது. அதிகாரி ஒரு மாணவனை எழுப்பி, "வாத்துக்கு இங்கிலீஷ்ல என்ன பேரு?"




என்று கேட்டார். அம்மாணவன் விழிக்க ஆரம்பித்தான். உடனே ஆசிரியர் சமயோசிதமாக "ஏண்டா, எது கேட்டாலும், 'டக், டக்'னு சொல்வே, அது மாதிரி இப்பவும் 'டக்'னு சொல்ல வேண்டியதுதானே?" என்று கூறினார். மூன்று முறை 'டக்' என்ற வார்த்தையைக் கேட்டதும் 'Duck' என அவன் கூற உடனே அதிகாரி பாராட்டி விட்டுச் சென்றார்.

- ப. அஷோக், பதினோராம் வகுப்பு,
பிரின்ஸ் மேல்நிலைப் பள்ளி,
மடிப்பாக்கம், சென்னை.

கஜினி முகமது

வரலாற்று ஆசிரியர் மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார். எங்கள் குழுவில் ஒருவனிடம் "கஜினி முகமது எப்போது இந்தியாவைக் கைப்பற்றினார்?" என்று கேட்டார். அதற்கு அவன் "பதினாறு முறை தோற்று பதினேழாவது முறை சார்" என்றான். அவனுக்குக் கஜினி முகமது இந்தியாவை வென்ற ஆண்டு தெரியவில்லை என்பதால்தான் இப்படி



பதில் சொல்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட நாங்கள் உடனே சுதாரித்துக் கொண்டோம். இன்னொருவன் சட்டென்று எழுந்து இந்தியாவை வென்ற ஆண்டைச் சொல்லி "சார் உன்னிடம் கேட்டது இந்த ஆண்டைத்தான்?" என்றானே பார்க்கலாம்! ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்துவிட்டோம். நண்பனைக் காப்பாற்ற அவன் சாதுர்யமாக நடந்து கொண்டது, ஆசிரியருக்குப் புரிந்து போகாமல் இல்லை. நண்பன், "சாரி சார்... இனி கேட்கும்போது சரியாகச் சொல்லிடுவேன். கஜினி முகமது மாதிரி பதினாறுமுறை திணற மாட்டேன்" என்று கூறி விட்டு உட்கார்ந்தான்.

ராமகிருஷ்ணன், காயக்காடு.

பணம்

இயற்பியல் வகுப்பு. இயற்பியல் ஆசிரியர் வந்தார். பாடம் நடத்தினார். கடைசியாகச் செய்முறை புத்தகத்திற்குப் பணம் கொண்டு வராதவர்களை எல்லாம்



எழுந்து நிற்கச் சொன்னார். வகுப்பறையில் பாதி மாணவர்கள் எழுந்து நின்றார்கள். ஆசிரியர் அவர்களைப் பார்த்து "என்றைக்குத் தருகிறீர்கள்?" என்று கேட்க ஒவ்வொருவராக வாயில் வந்த தேதி எல்லாம் சொன்னார்கள். சொல்லச் சொல்ல ஆசிரியர் குறித்து வைத்துக் கொண்டார். கடைசியாக ஆசிரியர் 10ந் தேதி சொன்ன மாணவர்கள் அனைவரையும் நிற்கச் சொன்னார். ஒரு மாணவனிடம் "10ந் தேதி எந்தக் கிழமை வருகிறது பார்" என்றார். அன்று ஞாயிற்றுக் கிழமை. "ஆகையால் நீங்கள் அனைவரும் ஏமாற்றப் போகிறீர்களா?" என்றார். மாணவர்கள் அனைவரும் "இல்லை சார் அவசரத்தில் ஏதோ ஒரு தேதி சொல்லிவிட்டோம்" என்று மன்னிப்புக் கேட்டனர்.

- ந.துரை, வெள்ளையாம்பட்டு, விழுப்புரம் தாலுக்கா.

வாத்துக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?

தயாளன் தின்ற தோசை!

ஜானகி மணாளன்

மானூரில், ஏழைச் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் தயாளன். எல்லாரும் 'தயா' என்று அழைப்பார்கள். தந்தை இல்லை. தாய் வயதானவள்.

தயா, நாள் முழுதும் வேலைக்காக ஊர் ஊராக அலைவான். கிடைத்த வேலையை நேர்மையோடு செய்து சம்பாதித்து வருவான். அதைக் கொண்டு, தாய் குடும்பத்தை நடத்தி வந்தாள். வேலை எதுவும் கிடைக்காதபோது, இருவரும் பட்டினிதான்.

தினசரி, அவன் வேலை தேடப் புறப்படும்போது, தாய்- "தம்பி, தயா! போய் வா... நிச்சயம் இன்று உனக்கு வேலை கிடைக்கும். நம்பிக்கையோடு புறப்படு" என்பாள்.

கூடவே, "என்றாவது ஒரு நாள், நமக்கும் நல்ல காலம் பிறக்கும். நம் கஷ்டமெல்லாம் தீரும். அப்போது நாமும் வாழ்ந்து, பிறரையும் வாழ வைப்போம்" என்பாள். எனவே தயாவின் மனத்தில் பிறருக்காக வாழ வேண்டும் என்ற நல்லெண்ணம் ஆழமாகப் பதிந்திருந்தது.

ஒருநாள், வழக்கம் போல் தயா தன் தாயின் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு, வேலை தேடிப் புறப்பட்டான். தாய், அவன் கையில் ஒரு சிறு பொட்டலத்தைக் கொடுத்து "தம்பி! இதில் மூன்று தோசைகள் உள்ளன. எடுத்துச் செல்... வழியில் சாப்பிடு..." என்றாள்.

தயா, நாள் முழுவதும் வேலைக்காகப் பல இடங்களிலும் அலைந்தான். மாலை வந்தும்கூட, எந்த வேலையும் கிடைக்கவில்லை. எனவே மிகுந்த வேதனையுற்றுச் சோர்வுடன் வீடு நோக்கித் திரும்பினான்.

வரும் வழியில் ஒரு பெரிய காடு. அதனுள் நுழைந்துதான் ஊரை அடைய வேண்டும்.

அந்தக் காட்டில் ஒரு பெரிய குளம். அதன் கரையில் ஒரு பெரிய வயதான ஆல மரம். அதனடியில் போய் அமர்ந்து, அவன் சற்று நேரம் இளைப்பாறினான்.

காலை முதல், தயா எதுவுமே சாப்பிடவில்லை. பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. அதன் பிறகுதான், அவனுக்குத் தன் தாயார் கொடுத்திருந்த தோசைப் பொட்டலத்தின் நினைவு வந்தது..

அதை எடுத்துப் பிரித்து வைத்துக் கொண்டு, சற்று உரத்த குரலில், "ஒன்று... இரண்டு... மூன்று" என்று எண்ணியவாறு, "மூன்றையும் தின்று விடலாமா? அதுதான் சரி..." என்றான்.

பிறகு, "முதலில் இதைப் பிய்த்துத் தின்போம்" என்றவாறு முதல் தோசையைக் கையில் எடுத்தான்.

அந்தக் குளக்கரையில், வெகு காலமாக, வெவ்வேறு இடங்களில், மூன்று பூதங்கள் வசித்து வந்தன. முதலாவது பூதம், தயா வந்து அமர்ந்திருந்த மரத்தின் பெரிய பொந்தில் வசித்து வந்தது. அவன் தனக்குத்தானே பேசியது, அதன் காதில் விழுந்தது.

உடனே, அது, 'மூன்றையும் தின்று விடலாம் என்கிறானே? இக் குளக்கரையில் மூன்று பூதங்கள் வசிப்பது இவனுக்குத் தெரிந்து விட்டதோ? முதலில் இதைப் பிய்த்துத் தின்னலாம் என்கிறானே...?



என்னைத் தானோ...?' எனப் பயந்துவிட்டது.

'எப்படியாவது இவனிடமிருந்து தப்பிக்க வேண்டுமே! என்ன செய்யலாம்?' என்று யோசித்தவாறு பூதம் மரப் பொந்தைவிட்டு வெளியில் வந்தது. அவனிடம் கெஞ்சிக் கேட்டு, எதையாவது தருவதாகக் கூறித் தப்பித்து விட வேண்டும் என்று அது முடிவு செய்தது.

தயா எதிரில் போய் நின்று, அவனைக் கையெடுத்துக் கும்பிட்ட பூதம். "இளைஞனே! என்னைப் பிய்த்துத் தின்று விடாதே... விட்டு விடு..." என்றது.

முதலில் தயாவுக்கு எதுவும் புரியவில்லை. பிறகு சமாளித்துக்கொண்டான். சாதுர்யமாக நடக்கத் தீர்மானித்தான்.

"ஆம் பூதமே! உன்னைத்தான் முதலில் கொன்று தின்னலாம் என்றிருக்கிறேன்'' என்றான்.

உடனே பூதம் கெஞ்சத் தொடங்கி விட்டது. "தயவு செய்து, என்னை மட்டும் விட்டு விடு... உனக்கு ஒரு மூட்டை நிறையத் தங்க நாணயம் தருகிறேன்... விட்டு விடு...'' என்றது.

"சரி... பிழைத்துப் போ..." என்றான் தயா. பூதம் கொடுத்த தங்க நாணய மூட்டையைச் சுமந்து கொண்டு கிளம்பினான். சற்று தூரம்தான் நடந்திருப்பான், அவனிடம் ஒரு எண்ணம் 'பூதம் என்னை மட்டும் விட்டு விடு என்றதே! அதற்கு என்ன பொருள்? அப்படியானால், இக் குளக்கரையில் இன்னும் சில பூதங்கள் இருக்கலாமோ..? எதற்கும் எச்சரிக்கையாக இருப்போம்' என்று முடிவு செய்தான். குளக்கரையோடு நடந்தான்.

வழியில் ஒரு கிணறு இருந்தது. தயா, அதன் கைப்பிடிச் சுவரில் போய் அமர்ந்தான். முதல் தோசையைத் தின்றான். பிறகும் அவனுக்குப் பசித்தது. எனவே முன் போல இன்னொரு தோசையை எடுத்து வைத்துக்கொண்டு, உரக்கச் சொன்னான்: "ஒன்றைத் தின்றாயிற்று... இன்னும் பசி அடங்கவில்லையே... இரண்டாவதாக இதையும் பிய்த்துத் தின்று விடலாமா...?'' என்றான்.

அவன் அமர்ந்திருந்த கிணற்றுக்குள் ஒரு பூதம் வசித்து வந்தது. அவன் பேசியது, அதன் காதில் விழுந்து விட்டது. உடனே அதற்குப் பயம் வந்துவிட்டது. அது நினைத்தது.

'ஒன்றைத் தின்றாயிற்று என்கிறானே..? மரப் பொந்தில் வசிக்கும் நம் சகோதரனைக் கொன்று தின்று விட்டானோ? அடப் பாவமே... நாமாவது தப்பிக்க வேண்டுமே... என்ன செய்யலாம்...?' என்று யோசித்தவாறே வெளி வந்தது.

தயாவும் இதைத் தானே எதிர் பார்த்தான். பூதம் அவனைக் கையெடுத்துக் கும்பிட்டவாறே சொல்லிற்று: "ஐயோ! என்னையும் கொன்று விடாதே... நான் உனக்கு ஒரு மந்திரம் கற்றுத் தருகிறேன். அதை நீ ஒரே ஒரு தடவைதான் பயன்படுத்தலாம். அதை உச்சரித்தால், உனக்குப் பெரிய மாளிகை, தோட்டம், நிலம் எல்லாம் கிடைக்கும். என்னை விட்டு விடு" எனக் கெஞ்சியது.

உடனே தயா, "சரி... பிழைத்துப் போ..." எனக் கூறிவிட்டு, அதனிடமிருந்து மந்திரத்தைக் கற்றுக் கொண்டு, தங்க நாணய மூட்டையுடன் குளக்கரையோடு சென்றான்.

சற்று தூரத்தில் ஒரு பாழடைந்த பங்களா. அவனுக்கு அதிலும் ஏதாவது பூதம் இருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே, அதனருகில் போய் அமர்ந்து, இரண்டாவது தோசையைத் தின்றுவிட்டு உரக்கச் சொன்னான்: "ஏற்கனவே இரண்டைத் தின்றாகிவிட்டது. இது ஒன்றுதான் மீதம். இதையும் பிய்த்துத் தின்று விட வேண்டியதுதான்" என்றான்.


அந்தப் பங்களாவில் இருந்த பூதமும் அதைக் கேட்டுப் பயந்துபோய், வெளியில் வந்து, "தயவு செய்து என்னை விட்டுவிடு. ஏற்கனவே இரண்டு பேரைத் தின்றது போதும். நான் ஒரு நல்வாழ்வுப் பூதம். ஒரு ஸ்லோகம் சொல்லித் தருகிறேன். அதைச் சொல்லிக்கொண்டே, என்னை நினைத்து தியானம் செய்தவாறு எந்தச் செயலைத் தொடங்கினாலும் உனக்கு வெற்றிதான். என்னை விட்டு விடு'' என்றது.

"சரி..." என்று ஸ்லோகத்தைக் கற்றுக் கொண்டு, நாணய மூட்டையுடன் தயா ஊர் திரும்பினான். அவன் தாயார் அவனை அன்போடு வரவேற்றாள். அவன் நடந்த விஷயங்கள் அனைத்தையும் தாயாரிடம் கூறினான். பிறகு பூதங்கள் காட்டிய வழியில், பல்வேறு வசதிகளைப் பெற்றுத் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்தான்.

''போட்டால் உடையாதது?''
''கையெழுத்து!''

– இரா. கிருத்திகா லெட்சுமி







இடமிருந்து வலம்

1. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்று சொன்னதற்காக மத குருமார்களால் தண்டிக்கப்பட்டவர் (4)

3. நத்தையின் மேலோடு _______ பொருளால் ஆனது (4)

5. வாழை, தென்னை போன்றவை இப்படி காய்க்கும் (2)

7. வீட்டைப் பாதுகாக்க இது அவசியம் (3)

13. சிறுபாம்புகளைக்கூட இரையாக்கிக் கொள்ளக்கூடிய கம்பீரமான பறவை (3)

15. சமைக்கக்கூடிய, சத்து நிறைந்த தாவரங்களை _______ என்று அழைப்பார்கள் (2)

16. எண்ணெய், திரியால் வெளிச்சம் தருவது _______ (4)

வலமிருந்து இடம்

6. நான் என்று சொல்வதைவிட _______ என்று சொன்னால் சிறப்பு (2)

10. வாத்து இனங்களில் ஒன்று. பெரிய உருவமும் நீண்ட கழுத்தும் கொண்டது. (4)

12. உலகில் உள்ளோர் எல்லாம் எதிர்த்து நின்றாலும் _______ கொள்ளத் தேவையில்லை என்றார் பாரதி (4)

14. ஆறு (2)

18. ஐ வகை நிலங்களுள் ஒன்று (4)

மேலிருந்து கீழ்

1. குழம்பு, கூட்டு முதலியவற்றைத் தாளிக்கும்போது பயன்படுத்தும் முக்கிய பொருள் (3)

2. அதிர்ஷ்டம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)

8. உயிரினங்களிலேயே அதிக எண்ணிக்கை உடைய உயிரினம் (2)

9. பாகற்காய் கசக்குமா? (2)

10. குழு என்பதை இப்படியும் கூறலாம் (2)

11. கிழமைகளில் ஒன்று (2)

14. விரல்களில் வெட்ட வெட்ட இது வளரும் (3)

கீழிருந்து மேல்

4. சிங்கம் _______யில் வாழும் (2)

12. அற்புத விளக்கு என்றதும் நினைவுக்கு வருபவர் (5)

16. அப்பலோ, மிர், ஜி.எஸ்.எல்.வி போன்றவை _______ (5)

17. வெயிலிலிருந்தும் மழையிலிருந்தும் நம்மைக் காக்கக் கூடியது (2)

18. தமிழ்ச்சங்கம் வளர்த்த இடம் (3)

— ச. கார்த்திகா, ஒன்பதாம் வகுப்பு,
ஆக்ஸிலியம் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்.

விடை: 34ம் பக்கம்


டைகர் என்றால் என்ன?


புலியை டைகர் என்கிறோம். டைகர் என்பது பாரசீகச் சொல். டைகர் என்றால் பாரசீக மொழியில் வில்லில் நாண் ஏற்றி விடும் அம்பைக் குறிப்பது. அம்பு வேகமாகப் போவது போல புலியும் வேகமாகப் போவதால் இந்தப் பெயர் நிலைத்து விட்டது.

– ஆர். சிவபெருமாள், இரணியல்.

எந்திரப் புலியை உருவாக்கியவர் மாவீரன் திப்புசுல்தான். ஆங்கிலம், பிரெஞ்சு உள்பட பல மொழிகளைக் கற்றவர். இவர் உருவாக்கிய எந்திரப்புலி உண்மையான புலியைப் போல கண்களை உருட்டும், வாலைச் சுழற்றும், பயங்கரமாக உறுமும், சீற்றத்துடன் சீறிப் பாயும். எந்திரப் புலியின் சீற்றத்தைக் கண்டு வெள்ளைச் சிப்பாய்கள் மரண பயத்தால் மிரண்டு அலறுவர். பழுதடைந்த இந்த எந்திரப்புலி தற்போது இலண்டன் மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதை இதுவரை எவ்வளவு முயன்றும் சரிசெய்ய முடியவில்லை.


– எஸ். மோகன்ராஜ், சீர்காழி.






கண்ணீர்ச் சுரப்பியின் நாளம் கண்ணின் மேல் இமைக்கு அடியில் திறக்கிறது. இது உப்பு கலந்த நீரைச் சுரக்கிறது. இந் நீர் கண்ணின் கோளத்தைப் பாதுகாப்பதோடு, கண்ணிற்கு ஈரப்பசையையும் கொடுக்கிறது.


– கோ. செந்தமிழ்ச் செல்வி, பத்தாம் வகுப்பு, சோ.சு.க.வி. மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.





கவரிமான்களின் கொம்புகள் ஒவ்வொரு ஆண்டும் உடைந்து முளைக்கும் இயல்புடையது. ஜனவரி மாதத்தில் மூன்றங்குலம் போக எஞ்சியவை உடைந்து விடும். மீண்டும் அவை ஜூனில் இருந்து செப்டெம்பர் வரை முளைத்துப் பழையபடி அழகாகக் காட்சியளிக்கும். நமக்கு நகங்களைப் போல அவற்றிற்குக் கொம்பு போலும்!

– ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.



கோல் கொண்டா கோட்டையில் ஒரு பிரமிக்கத் தக்க அமைப்பு உள்ளது. அந்தக் கோட்டைக்குள் சுமார் ஆறு அடி விட்டம் கொண்ட வட்டமான ஓர் இடம் உள்ளது. அங்கிருந்து சுமார் அரை மைல் தூரத்தில் சுல்தானின் உப்பரிகை. அங்கு இருக்கும் சுல்தானுக்கு எதிரி அல்லது ஒற்றர் பற்றியச் செய்திகளைச் சங்கேத முறையில், அந்த வட்டத்திலிருந்து கைதட்டி தெரிவிப்பார்களாம். அந்த ஒலி மிகத் துல்லியமாக உப்பரிகைக்கு வரும். இப்போதும் அந்த அமைப்பு கொஞ்சம் கூட பழுதுபடாமல் இருக்கிறது. அந்த வட்டத்தை விட்டு வெளியே வந்து கைதட்டினால் உப்பரிகையில் இருப்பவர்களால் கேட்க முடிவதில்லை.

– கோபிசெட்டிபாளையம், ஜி.கே.எஸ். மூர்த்தி.

சிலிகான் டி ஆக்ஸைடு என்றால் என்ன தெரியுமா? மணலுக்குத்தான் இரசாயனத் துறையில் இந்தப் பெயர் வழங்கப்படுகிறது.

'கிடக்கிறது – தூசி விஷயம்' என்று எவ்வளவு அலட்சியமாகச் சொல்லி விடுகிறோம்! ஆனால் அத் தூசியைப் பற்றி 'பிளாக்டின்' என்ற விஞ்ஞானி 255 பக்கங்கள் கொண்ட ஒரு ஆராய்ச்சி நூலை எழுதியிருக்கிறார். மேலும் புத்தக முன்னுரையில், 'தூசியைப் பற்றி எழுத வேண்டுமென்றால் ஒரு கலைக்களஞ்சியமே வெளியிடலாம். எனது சிற்றறிவைக் கொண்டு, மேலெழுந்தவாரியாகவே இப் புத்தகத்தை எழுதியுள்ளேன்' என்று கூறியிருக்கிறார் பிளாக்டின்.

– ப. கந்தசாமி, திருச்செங்கோடு.

மிகப் பெரிய எஃகு ஆர்ச், நியூரிவர் ஜார்ஜ் பாலத்தில் அமைந்துள்ளது. அமெரிக்காவில் உள்ள இந்தப் பாலத்தின் வளைந்த பகுதி மட்டும் 1700 அடியாகும்.

– ராசா, சென்னை.

'அல்பட்ராஸ்' என்றொரு பறவை வகை உள்ளது. இந்த வகைப் பறவை 120 செ.மீ. உயரமும், 25 பவுண்டு எடையும் இருக்கும். விரித்த இறக்கைகள் ஒரு முனையிலிருந்து மறு முனை வரையில் 510 செ.மீ.

பிருந்தாவனம்

இருக்கும். இந்தப் பறவை விமானத்தைப் போல் தரையில் கொஞ்ச தூரம் ஓடிய பின்னரே ஆகாயத்தில் எழும்பி பறக்கும். இறக்கைகளை அதிகமாக அடித்துக் கொள்ளாமலேயே இது பறக்கக்கூடியது. சேர்ந்தாற்போல் பல நாட்கள் பறக்கும். ஆகாயத்தில் பறந்து கொண்டே தூங்கும் அதிசய சக்தி கொண்டது.

– மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.

இரண்டு பேர் சந்திக்கும்போது வலது கையை நீட்டிக் குலுக்கும் வழக்கம் இன்றைய நாகரிகத்தின் முக்கிய அம்சமாகவுள்ளது. முன்காலத்தில் வீரர்கள் வலது கையில் வாள் அல்லது துப்பாக்கி வைத்திருப்பார்கள். 'கையில் வாள் இல்லை, தாக்குவேன் என்ற பயம் வேண்டாம். நட்புறவுடன் நாம் இருப்போம்' என்பதற்கு அறிகுறியாக சந்திக்கும் இருவர் தமது வலது கரத்தை நீட்டிப் பற்றிக் குலுக்குவார்கள். வாள் மறைந்து விட்டது. வழக்கம் மட்டும் நிலைத்து விட்டது.

– எம். சகிலாபானு,
லெட்சுமாங்குடி.

'வீடியோ' என்பது லத்தீன் மொழிச் சொல். இதற்கு 'நான் பார்க்கிறேன்' என்று பொருளாகும்.


டால்ஃபின் மீனுக்கு மனிதனை விட ஏழு மடங்கு கூர்மையாகக் காது கேட்கும்.

ஒரு ரூபாய் வெள்ளி எடையில் சுமார் 370 மீட்டர் சரிகை இழை இழுக்கலாம்.

முள்ளங்கி, கேரட் ஆகியவை கிழங்கு வகைகள் இல்லை. அவை வேர்கள்.


நாய்க்கு மோப்ப சக்தி அதிகம் இருப்பது போல ஒட்டகத்திற்குப் பார்வைச் சக்தி மிக மிக அதிகம். ஒரு மைலுக்கு அப்பால் தண்ணீர் இருப்பதை ஒட்டகம் எளிதாகக் கண்டுபிடித்து விடும். ஒட்டகம் தன் நடையை மிக வேகப்படுத்தினால் அது தண்ணீர் இருக்கும் திசையை அறிந்து ஓடுகின்றது என்று பொருள்.

– க. குழந்தைவேல்,
மேட்டுத்திருக்காம்புலியூர்.



குறுக்கெழுத்துப் புதிர் விடை!

1 க	லி	லி	2 யோ	■	3 கை	ட்	டி	ன்
டு	■	■	க	■	4 கு	■	■	தீ
5 கு	லை	■	ம்	6 நா	■	7 க	த	வு
■	■	8 மீ	■	■	9 ஆ	■	■	லா
ம்	ன	ன்	10 அ	■	ம்	11 ச	ச்	12 அ
ல	■	■	ணி	■	■	ணி	■	■
13 க	ழு	கு	■	தி	14 ந	■	15 கீ	ரை
ண்	■	■	டை	■	க	■	■	து
16 வி	ள	க்	17 கு	■	ம்	தி	ரு	18 ம



புதிர் உலகம்

I. எங்கள் வகுப்பிலுள்ள மாணவர்களை பெஞ்சுக்கு மூவர் என்று உட்கார வைத்தால் மூன்று பேருக்கு உட்கார இடமில்லை. அதே நேரம் பெஞ்சுக்கு நான்கு பேர் என்று உட்கார வைத்தால் மூன்று பெஞ்சுகள் காலியாக உள்ளன. எனில் மொத்தம் எத்தனை மாணவர்கள்? எத்தனை பெஞ்சுகள்?

- ஹ. அருண்குமார், இராமநாதபுரம்

II. சில எண்களைச் சில எண்கள் மட்டுமே மீதமில்லாமல் வகுக்கும். எல்லா எண்களையும் வகுக்க முடியாது. ஒரு நான்கு இலக்க அற்புத எண்ணை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 ஆகிய அனைத்து எண்களும் வகுக்கும். அந்த அற்புத எண் என்ன?

- எஸ். மோகன்ராஜ், சீர்காழி

III. சந்தைக்குச் சென்ற நான், பசு கன்று இரண்டையும் சேர்த்து 550 ரூபாய்க்கு வாங்கினேன். பசுவின் விலைக்கும், கன்றின் விலைக்குமுள்ள வித்தியாசம் 500 ரூபாய், அப்படியானால் கன்றின் விலை என்ன?


- கோ. செந்தமிழ்ச் செல்வி, பத்தாம் வகுப்பு, சோ.சு.க.வி. மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

IV. 'லால்குடி லாலா' என்பவருக்கு மாம்பழம் என்றால் உயிர். ஒரு தோட்டத்தில் திருட்டு மாம்பழம் பறித்துக் கொண்டிருந்தபோது தோட்டக்காரர் கண்ணில் பட்டுவிட்டார். உடனே லாலாவைத் துரத்தினர். மரத்திலிருந்து கீழே குதித்தபோது அவர் பறித்ததில் 2/4 பங்கு மாம்பழம் தவறியது. வாய்க்காலை தாண்டும் சமயம் 1/2 மாம்பழம் தவறியது. வேலியேறி குதிக்கும்போது 1/2 பழங்கள் தவறியது. இப்போது அவர் கையில் 8 மாம்பழங்கள் இருக்கிறது. எனில் அவர் பறித்தது எத்தனை?

- சு. முத்துக்காளீஸ்வரன், திருச்சி-2

V. கலைந்துள்ள வார்த்தைகளை ஒழுங்கு படுத்தி, வட்டமிட்ட எழுத்துகளை ஒன்று சேர்த்தால் பிரபல பழமொழி கிடைக்கும்.

றுதபறல்
ருமைஎ
ருஒன்வ
யேஇசு
லகாபரம்



- ஹ. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்.


விடை 56-ம் பக்கம்


10 ஆளப்பிறந்தவன்

கதை: ராஜி   படம்: லலிதா








குரல் கேட்டு இருவரும் திரும்பினர். மற்றொரு கவசத்திலிருந்து சோமு பேசினான்.
உனக்கு ஏனப்பா இந்தச் சின்னப் புத்தி?
வீரசிம்மனின் கையாள்ப்பா இவன். புத்தி பின்னே எப்படி போகும்?
உன்னைத் தண்டிக்க என்னால் முடியும். அதை நான் விரும்பவில்லை. இனி என் விவகாரங்களில் தலையிடாதே! போய் விடு.
அன்றிரவு அரண்மனையிலுள்ள பெரியவரை, பிரபாகரன் சந்தித்தார்.
இளவரசர் தமது பதவிக்கு ஏற்றபடி பழகவில்லை. கிராமத்துச் சிறுவர்களுக்கு அளவுக்கு மீறி சலுகைகள் தருகிறார்.


பழகட்டும். அதனால் அடிக்கடி ஆபத்தில் சிக்கிக் கொள்கிறாரே. அதற்கு என்ன செய்யலாம்?
நான் மெய்க்காப்பாளனாக இருப்பது இளவரசருக்குப் பிடிக்கவில்லை. என் வார்த்தைகளைக் கேட்பதில்லை. ஆகவே...
சொல்லுங்கள். இளவரசரை ஆபத்திலிருந்து காக்கக்கூடிய எந்த யோசனையையும் வரவேற்கிறேன்.
அது வந்து...
... நம் லைலாவை ஜெயசிம்மருடன் இருக்கும்படி செய்தால்? ஒத்த வயது. விளையாட்டுத் தோழியாக இருப்பதோடு...
லைலாவா?



நமது சேனாதிபதியாரின் மகள்தானே? லைலா ஒரு வீராங்கனை. ஜெயசிம்மரைக் காக்கக் கூடியவள்தான்.
அங்கு வந்த ஜெயசிம்மன்—
நீங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். என்னுடன் நட்புக் கொள்ள ஒரு பெண்தானா அகப்பட்டாள் உங்களுக்கு?
நீங்கள் இந் நாட்டின் சொத்து. உங்களைக் காக்க வேண்டியது எங்கள் பொறுப்பு. உங்களுக்குப் பிடிக்காவிட்டாலும் சில விஷயங்களுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்.
அப்போது அங்கே லைலா வந்தாள்.
தொடரும்



தாவரங்களே இல்லாத உலகத்தை நம்மால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. உலகில் வாழும் உயிரினங்களில் முக்கியமானது தாவரங்கள்தான்! தாவரங்களைச் சார்ந்துதான் மற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. ஆப்பிள், உருளைக் கிழங்கு போன்ற தாவரங்கள் நமக்கு உணவு தருகின்றன. சில தாவரங்கள் வீடுகட்ட, அடுப்பெரிக்க, காகிதம் தயாரிக்கப் பயன்படுகின்றன. விலங்குகள், பறவைகள், பூச்சிகள், மீன்கள் என எல்லா உயிரினங்களும் நம்பியிருப்பது தாவரங்களைத்தான். தாவரங்கள் பிறரை நம்பி வாழ்வதில்லை. தாமே உணவு தயாரித்துக் கொள்கின்றன. தாவரங்களை நோக்கி நாம் ஈர்க்கப்படுவதற்கு முக்கியக் காரணம் அவற்றின் பூக்கள்தான். விதவிதமான வண்ணங்களிலும் வடிவங்களிலும் காணப்படும் பூக்களை விரும்பாதவர்கள் உண்டா?


கோகுலம்
போஸ்டர்



விடுகதைப் பக்கம்

I

1. வெளியில் சென்றவனை உள்ளே இழுக்காவிட்டால் உயிர் போய்விடும் – அவன் யார்?

2. மிதித்தாலும் உன்னை தூக்கிச் செல்வான் – அவன் யார்?

3. இவன் சுற்றிக் கொண்டே இருப்பான். ஆனால் மயங்கி விழ மாட்டான் – அவன் யார்?

4. வளர்ந்தவனை, தேய்ந்தவனை இன்று காணவில்லை – அவன் யார்?

5. மேலே இருந்து விழுந்தவன் அடிபடாமல் ஓடுகிறான் – அவன் யார்?

– பாரதி செல்வம், சென்னை - 93.

II

1. ஆட்களோ ஆயிரம், அரைஞாண் கயிறோ ஒன்று – அது என்ன?

2. குதிரை ஓட ஓட வால் தேய்ந்து போனது – அது என்ன?

3. ஒன்பது பிள்ளைகளுக்கும் ஒரே குடுமி – அது என்ன?

4. நான்கு கால் உண்டு. ஆனால் வால் இல்லை – அது என்ன?

5. இது பறிக்கப் பறிக்க பெரிதாகிக் கொண்டேயிருக்கும் – அது என்ன?

6. இரண்டு வாசலுக்கு நடுவே ஒரே ஒரு தூண் – அது என்ன?

7. நகரம் உண்டு வீடில்லை, கடலுண்டு நீரில்லை – அது என்ன?

8. வெள்ளை நீரில் வெள்ளைக் கின்னம் மிதக்குது – அது என்ன?

– ஆ. அருள்ராஜ், தாரமங்கலம்.

III

1. தொட்டாலே அலற வைப்பான்; ஒதுங்கிப் போக வைப்பான் - அவன் யார்?

2. கடலுக்குள் இருப்பான், மகளிர் கழுத்திலும் இருப்பான் - அவன் யார்?

3. வல்லவனுக்கு வாலிலும் ஆயுதம் - அவன் யார்?

4. ஊருக்கு ஊர் உதைபட்டு உரியவனிடம் சேதி சொல்லுவான் - அவன் யார்?

5. ராத்திரி வந்த விருந்தாளிகள் காலையில் இருக்க மாட்டார்கள் - அவர்கள் யார்?

6. மட்டைக்கு ஆயிரம் கண், முட்டைக்கு மூன்று கண் - அது என்ன?

7. காற்றில் கரையாது; ஆனால் தண்ணீரில் கரைந்து விடும் - அது என்ன?

— பி. சுதா, பத்தாம் வகுப்பு 'இ' பிரிவு
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி.

மட்டைக்கு ஆயிரம் கண் முட்டைக்கு மூன்று கண் – அது என்ன?

விடைகள்:

I 1. மூச்சு, 2. சைக்கிள், 3. பூமி, 4. நிலா (அமாவாசையன்று) 5. மழைத்துளி.

II 1. துடைப்பம், 2. ஊசி நூல், 3. வெள்ளைப் பூண்டு, 4. நாற்காலி, 5. குழி, 6. மூக்கு, 7. உலகப்படம், 8. மோர், வெண்ணெய்.

III 1. ஹாரன், 2. முத்து, 3. தேள், 4. தபால், 5. வானத்தில் நட்சத்திரங்கள், 6. நார்க்கட்டில், தேங்காய், 7. உப்பு.



தண்ணீரில் விழுந்த புத்தகம்!

அருப்புக்கோட்டை செல்வம்

முரளியும் பாஸ்கரும் இணை பிரியாத நண்பர்கள். எங்கு சென்றாலும் இருவரும் ஒன்றாகத்தான் செல்வார்கள்.

இருவருக்குள்ளும் ஏதேனும் வாக்கு வாதம் என்று வந்து விட்டால் இருவருமே போட்டி போட்டுக் கொண்டு விட்டுக் கொடுப்பார்கள். இருவரிடையேயும் பொறாமை என்பதே இராது. தேர்வு நெருங்கி விட்டால் போட்டி போட்டுக் கொண்டு படிப்பார்கள்.

பதறிப் போய் புத்தகத்தை எடுத்து உதறினான். புத்தகத்தை விரித்தான். ஒரு பக்கத்தோடு இன்னொரு பக்கம் ஒட்டிக் கொண்டது.

அன்று தமிழாசிரியர் பொன்னம்பலம் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். இடையில் பாடத்தைக் கொஞ்சம் நிறுத்தி விட்டு, "பாஸ்கர் கொஞ்சம் இப்படி வா!"- என்று அழைத்தார் ஆசிரியர்.

"என்னங்க சார்...?"- என்று கேட்டுக் கொண்டே அவர் அருகே வந்தான் பாஸ்கர்.

"நம்ம பள்ளி நூலகத்துல உள்ளே நுழைஞ்சதும் வலது பக்கம் உள்ள பீரோவின் மேல் அறையில் சிலப்பதிகாரம் விளக்கவுரையோட இருக்கும். எடுத்துட்டு வா"- என்றார்.

பாஸ்கர் உடன் கிளம்பினான். நூலக அறையைத் திறந்து உள்ளே போனான். ஆசிரியர் சொன்ன அந்த பீரோவைத் திறந்து மேலே பார்த்தான். பக்கத்தில் இருந்த சேர் ஒன்றை இழுத்துப் போட்டு ஏறினான். வரிசையாக அடுக்கப்பட்டிருந்த நூல்களை ஒவ்வொன்றாக நகர்த்தினான். ஆசிரியர் சொன்ன நூலைக் கண்டுபிடித்து எடுத்தான். கீழே இறங்க முயன்ற போதுதான் புத்தகம் கைதவறி திறந்திருந்த தண்ணீர் பானைக்குள் விழுந்தது. இறங்கி அதை எடுக்கப் போனான். புத்தகம் தண்ணீரில் விழுந்து முழுவதுமாக நனைந்து போயிருந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பதறிப் போய் புத்தகத்தை எடுத்து உதறினான். புத்தகத்தை விரித்தான். ஒரு பக்கத்தோடு இன்னொரு பக்கம் ஒட்டிக் கொண்டது. அதுவும் அது ரொம்பப் பழைய புத்தகம்.

ஆசிரியரிடம் போய் என்ன பதில் சொல்வதென்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, யாரோ நடந்து வரும் ஓசை கேட்டது. மேலே பைண்டிங் செய்ய பழைய புத்தகங்களைப் போட்டு வைத்திருந்தார்கள். அதன் மேல் தூக்கி வீசினான். திரும்பிப் பார்த்தான். முரளிதான் வந்து கொண்டிருந்தான்.

"டேய் பாஸ்கர், என்னடா ஆச்சு? புத்தகம் இன்னும் கிடைக்கலையா...?"- என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தான்.

"அது... இங்க.... வந்து... ஆமா... நீ

இப்பத்தானே வந்தே?"- என்று கேட்டான் பாஸ்கர். அவன் வார்த்தையில் தடுமாற்றம் நிறைந்திருந்தது.

"இப்பத்தான் வந்தேன். சொல்லு புத்தகம் எங்கே?"- என மீண்டும் கேட்டான் முரளி.

"அது... வந்து புத்தகம்..... நானும் நல்லா தேடிப்பார்த்துட்டேன் காணோம்"- என்று சொன்னான் பாஸ்கர்.

"சரி... வாடா... ஆசிரியர்கிட்டப் போய்ச் சொல்லிடலாம்" என்றான் முரளி. இருவரும் வகுப்பறைக்குச் சென்றனர்.

"அங்கே புத்தகம் இல்லைங்க சார்..."- மனதைக்

நூலகம் சென்று, மேலே ஏறி அந்தப் புத்தகத்தை எடுத்துத் தன் பைக்குள் வைத்துக் கொண்டு வெளியேறினான் பாஸ்கர்.

திடப்படுத்திக் கொண்டு சொன்னான் பாஸ்கர்.

"என்னது... அது எப்படி காணாமல் போகும்? நேத்து தானே பார்த்தேன். சரி. நீ உட்கார். நான் அப்புறமா பார்த்துக்கிறேன்"- என்றார் ஆசிரியர்.

ஆனாலும், அவரிடம் பொய் சொல்லி விட்டோமே என்று அவன் மனம் மிகவும் வேதனைப்பட்டது. என்றாவது ஒருநாள் புத்தகத்தை எடுக்க மேலே ஏறினால் என்ன ஆகும் என்று யோசித்தவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

மாலையில் பள்ளிக்கூடம் விட்டதும் அனைவரும் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தனர். அப்போது பாஸ்கரின் அருகே வந்தான் முரளி.

"என்னடா பாஸ்கர், வீட்டுக்கு வரலையா...?"- என்று கேட்டான் முரளி.

"வீட்...டுக்கா... நீ கொஞ்சம் முன்னாடி போ.... நான் வந்திடுறேன்"- என்றான் பாஸ்கர்.

அவன் மனதில் ஏற்பட்ட தடுமாற்றத்தைப் புரிந்து கொண்டு பதில் எதுவும் பேசாமல் புறப்பட்டான் முரளி. அவன் போனதும், நூலகம் சென்று, மேலே ஏறி அந்தப் புத்தகத்தை எடுத்துத் தன் பைக்குள் வைத்துக் கொண்டு வெளியேறினான் பாஸ்கர்.

மறுநாள்... வெயில் வந்ததும் வீட்டின் முற்றத்தில் அந்தப் புத்தகத்தை விரித்துக் காய வைத்தான் பாஸ்கர்.

"ஏண்டா பாஸ்கர். என்னடா இது. புத்தகத்தைக் காய வச்சுக்கிட்டு இருக்கே. யார் புத்தகம் இது?"- என்று கேட்டார் அவன் அம்மா பரமேஸ்வரி.

"அது... வந்துங்கம்மா... யாருடையதும் இல்லை. பள்ளிக்கூடம் விட்டு வந்தபோது தண்ணீரிலே கிடந்தது. நல்ல புத்தகமா இருந்தது. அதாம்மா எடுத்துட்டு வந்தேன்"- அம்மாவிடமும் அழகாகப் பொய் சொன்னான்.

புத்தகம் காய்ந்து போய் விட்டதா? என்று அடிக்கடி விரித்துப் பார்த்தான். அப்போது அவனைத்தேடி, முரளி





வந்து கொண்டிருந்தான். அவன் வருவதைக் கண்ட பாஸ்கர், அந்தப் புத்தகத்தை எடுத்து அவசர, அவசரமாக மறைத்தான்.

"டேய்... முரளி.... இங்கே... இப்ப எதுக்குடா வந்தே?"- அவன் நா குழறியது.

அவன் ஒரு நாளும் இப்படி கேட்டதே இல்லை. இந்த இரண்டு நாட்களில்தான் எத்தனை மாற்றம். அவன் ஏதோ தவறு செய்திருப்பதை முரளியால் உணர முடிந்தது.

"பாஸ்கர் கடைக்குப் போறேன். நீயும் வர்றீயானு கேட்கலாம்னுதான் வந்தேன். வர்றீயா...?"- என்று



கேட்டான் முரளி.

''ஓ...வர்றேனே...'' - பாஸ்கர்.

நேற்றிலிருந்து முரளியிடம் உளறிக் கொண்டிருக்கிறோம் என்று

மறுபடியும் அதே பழக்கடைக்குச் சென்றனர். நேற்று அவர்கள் விலை கேட்ட அதே பழம். அதே இடத்தில்தான் இருந்தது.

அவனுக்குப் புரிந்தது. அவனிடம் சகஜமாகப் பேசி சமாளிக்க முயன்றான்.

இருவரும் பழக் கடைக்குச் சென்றனர்.

"ஐயா... அதோ... அந்த மாம்பழம் என்ன விலை?"- என்று கேட்டான் முரளி.

"அது... பத்து ரூபாய் தம்பி"- என்றார் கடைக்காரர்.

"அதை எடுங்கய்யா பார்க்கலாம்"- என்றான் பாஸ்கர்.

அந்த மாம்பழத்தை எடுத்து முரளியின் கையில் தந்தார் கடைக்காரர். கொஞ்ச நேரம் அதைப் பார்த்துக் கொண்டே இருந்தான் முரளி. என்ன நினைத்தானோ தெரியவில்லை.

"இருக்கட்டும்ங்க... நாளைக்கு வந்து வாங்கிக்கிறோம்"- என்று சொல்லி பழத்தை அவரிடமே கொடுத்தான்.

மறுநாள்... பள்ளிக்கூடம் விட்டதும் அவனை மார்க்கெட் பக்கமே கூட்டி வந்தான் முரளி. மறுபடியும் அதே பழக்கடைக்குச் சென்றனர். நேற்று அவர்கள் விலை கேட்ட அதே பழம். அதே இடத்தில்தான் இருந்தது.

"ஐயா... அந்தப் பழம் எவ்வளவு?"- எனக் கேட்டான்.

"என்ன தம்பிகளா...? இன்னைக்காவது வாங்குவீங்களா?" என்று கேட்டுக் கொண்டே, பழத்தை எடுத்து அவன் கையில் தந்தார் கடைக்காரர்.

"சொல்லுங்கய்யா... என்ன விலை?" என்று மீண்டும் கேட்டான்.

"ம்.."- பழத்தை உருட்டிப் பார்த்து விட்டு, எட்டு ரூபாய் கொடுங்க தம்பி?"- என்றார் கடைக்காரர்.

பழத்தை மீண்டும் வாங்கிப் பார்த்தான். நேற்றே பழம் நன்றாகப் பழுத்திருந்தது. இன்று பழத்தில் லேசாகக் கரும்புள்ளி ஒன்று தெரிய அதன் விலை டக்கென்று இரண்டு ரூபாய் குறைந்தது.

"இருக்கட்டுங்கைய்யா... நாளைக்கு வர்றோம்"- என்று திரும்பினான் முரளி.

இப்போது அந்தப் பழம் இரண்டாம் தட்டுக்கு மாறியது. இப்படியே இரண்டு மூன்று நாட்கள் நடக்க, பழம் கடைசித் தட்டுக்கு வந்து விட்டது. அதன் விலை இரண்டு ரூபாயானது. பழம் பல இடங்களில் வெம்பிப் போயிருந்தது.

"ஏண்டா முரளி. என்ன ஆச்சு உனக்கு? இந்தப் பழத்தை வாங்கி நீ என்ன செய்யப் போற?" எனக் கேட்டான் பாஸ்கர்.

"இது வெறும் பழம் மட்டும் இல்லைடா... பாடம்"- என்று நிறுத்தினான் முரளி.

"என்னது... பாடமா..?"

"ஆமாண்டா... நாம முதல் நாள் பார்த்தபோது இந்தப் பழம் பத்து ரூபாய். அழகா பழுத்து இருந்தது. மறுநாள் எட்டு ரூபாயானது. அது ஒருபடி இறங்கிடுச்சு. ஏன்? பழத்து மேல ஒரு கரும்புள்ளி இருந்ததே! அதுனால... படிப்படியா இறங்கி பூராவும் வெம்பிப் போன நிலையில் கடைசித் தட்டுக்கு வெறும் ரெண்டு ரூபாய்க்கு. இந்த நிலை பழத்துக்கு மட்டும் இல்லைடா... நமக்கும்தான்....

பாஸ்கர் அதிர்ந்து போனான். அவனை வியப்போடு நிமிர்ந்து பார்த்தான்.

"ஆமாண்டா... பாஸ்கர். நாம எல்லாருமே இந்த மாம்பழம் மாதிரிதான். அன்னைக்குப் புத்தகம் தண்ணில விழுந்ததே! அது கூட தப்பு இல்ல. அதை மறைச்சு, பொய் சொன்னே பார்த்தியா... அதுதாண்டா முதல் கரும்புள்ளி. பொய்யே பேசாத நீ என்கிட்ட உங்க அம்மாகிட்ட, ஆசிரியர்கிட்ட பொய் சொல்லி இருக்கே. கடைசியில அந்த புத்தகத்தை நீயே திருடிட்டு வந்திருக்கே."

புத்தகம் தண்ணில விழுந்ததே! அது கூட தப்பு இல்ல. அதை மறைச்சு, பொய் சொன்னே பார்த்தீயா... அதுதாண்டா முதல் கரும்புள்ளி.

"இல்ல... நான் திருடிட்டு வரலை. காய்ந்ததும் திருப்பிக் கொண்டு போய் வச்சிடலாம்னுதான்..."

"தப்புடா பாஸ்கர். விஷயம் ஆசிரியருக்குத் தெரிஞ்சா நம்மை அவர் என்ன நினைப்பார். தவறு செய்யாதவங்க யாருமே இல்ல. நாமெல்லாம் படிக்கிறவங்க. தவறுன்னு தெரிஞ்சா உடனே திருத்திக்கணும். இல்லேன்னா நாம படிக்குறதுல அர்த்தமே இல்ல"- என்று அழுத்தமாகச் சொன்னான் முரளி.

"ஸாரிடா முரளி. என்னோட தவறுகளை நான் உணர்ந்துட்டேன். வெம்பி அழுகிப் போற மாம்பழமாப் போக இருந்த என்னை மீண்டும் நல்ல பழமா ஆக்கிட்டே. ரொம்ப நன்றிடா. நான் இப்பவே ஆசிரியர்கிட்டப் போயி நடந்த விஷயத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்கப் போறேன்"- என்று சொல்லி விட்டு வேகமாக நடந்தான் பாஸ்கர்.


இப்போது அவன் நடையில் கூட தடுமாற்றம் இல்லாமல் ஒரு தெளிவு இருந்தது.

"என்ன 'பட்டு' எடுத்திருக்கீங்க, நல்லாவே இல்லே...!"

"கடை மூடற நேரத்திலே அவசரப்'பட்டு' எடுத்தோம்!"


- கலை நண்பன்





ராமு தைத்த ஆடை!
கதை: ப. கவிதா, புதுடெல்லி
படம்: மகேஸ்
ராமு விதவிதமாகத் துணிகளை தைப்பதில் வல்லவன்.
நான் எப்படி?
ராமு இவ்வளவு நல்லா, ரசனையோடு துணி தைக்கறியே! நீ ஏன் அரண்மனை தையற்காரனாக ஆகக் கூடாது?
அரண்மனையில் தையற்காரனாக இருக்கும் சோமு என் நண்பன்தான். நாளைக்கே அவனைப் போய் பார்.
சரிங்க ஐயா.
மறுநாள் அரண்மனையில் சோமுவைச் சந்தித்தான் ராமு.
ஐயா, என் பெயர் ராமு. உங்க நண்பர்..
ம்.. ஒரு துணியைத் தை. பார்க்கலாம்.
ராமு ஒரு துணியைத் தைத்துக் காட்டினான்.
எவ்வளவு அருமையாகத் தைத்திருக்கிறான்! என்னைவிடத் திறமையானவன். இதை வெளியில் காட்டிக்கக் கூடாது.
எப்படி இருக்குங்க?
பரவாயில்லை. இன்னும் நல்லா தைக்கணும்.
சரிங்க.


அன்றுமுதல் இளவரசிக்குத் தைக்க வேண்டிய துணிகளை ராமுவிடம் கொடுத்தான் சோமு.
ஜாக்கிரதையா இதைத் தைத்து முடி.
சோமு இளவரசியிடம் ராமு தைத்த உடையைக் கொடுத்தான்.
ரொம்ப அழகா இருக்கே! யார் தைத்தது?
ம்..நான்தான் இளவரசி.
இந்த முத்து மாலையைப் பரிசாக வைத்துக் கொள்.
நன்றி இளவரசி.
சோமு திரும்பி வந்தான்.
ஐயா, இளவரசிக்குப் பிடித்ததா?
சுத்தமாகப் பிடிக்கலை. ஒழுங்கா தை. இல்லைன்னா வேலை காலி.
இப்படி எட்டுமுறை ஏமாற்றினான் சோமு. ஒரு நாள் –
எவ்வளவு கஷ்டப்பட்டு தைத்தாலும் இளவரசிக்குப் பிடிக்கலைன்னு சோமு சொல்றாரே... துணியும் திரும்பி வரலையே. இதுல ஏதோ சூழ்ச்சி இருக்கு.
ம்... நல்ல யோசனை தோணுது.
ராமு, இளவரசி பிறந்தநாள் ஆடை தயாரா?
ம்... இந்தாங்க.
இளவரசியிடம் கொடுத்தான் சோமு. வாங்கிப் பார்த்தவள் அதிர்ந்தாள்.
இது யார் தைத்தது?
நான்தான் இளவரசி!


எவ்வளவு மோசமாகத் தைத்திருக்கே? உனக்கு என்ன தண்டனை தெரியுமா?
ஐயோ என்ன இது?
இளவரசி, என்னை மன்னித்து விடுங்கள். இதை நான் தைக்கவில்லை.
என்ன சொல்றே?
இதுவும் இதுக்கு முன்னால் கொடுத்த எட்டு ஆடைகளையும் தைத்தது என் உதவியாளன் ராமுதான்.
யாரங்கே? ராமுவை அழைத்து வாருங்கள்.
ராமு அழைத்து வரப்பட்டான்.
இளவரசி என்னை மன்னித்துவிடுங்கள். சோமு ஏமாற்றுவது தெரிந்து உண்மையைக் கண்டுபிடிக்கவே இப்படி செய்தேன். இதோ உங்கள் பிறந்த நாள் ஆடை.
ஆஹா! ரொம்ப நன்றாக இருக்கிறது.
சோமு உனக்குக் கொடுத்த பரிசுகளை ராமுவுக்குக் கொடுத்து விடு.
சரிங்க இளவரசி.
நீ செய்த தவறுக்கு நாளை முதல் நீதான் ராமுவின் உதவியாளன்.

● ப. கார்குழலி, நத்தம்.

? அணுவியல் மருத்துவம் என்றால் என்ன, டாக்டர்?

! நம் உடல் உள்ளுறுப்புகளின் அமைப்பையும் அவை இயங்கும் தன்மைகளையும் அணுக்கதிர் வீச்சுப் பொருள்களைக் கொண்டு (Radio Nucleotides) மிகவும் துல்லியமாகப் படமெடுத்து, அந்த உறுப்புகளில் காணப்படும் பல்வேறு நோய்களையும் பாதிப்புகளையும் கண்டறிந்து, அவற்றிற்குரிய சிகிச்சைகளை அளிப்பதே அணுவியல் மருத்துவமாகும் (Nuclear Medicine). இம் மருத்துவமுறையைக் 'கதிர்வீச்சு மருத்துவ'த்தின் (Radiation Medicine) விரிவாக்கப்பட்ட நிலை எனக் கூறலாம். கடந்த சில ஆண்டுகளாகப் பிறந்த குழந்தை முதல் முதியோர் வரை எல்லா வயதினருக்கும் ஏற்படும் நோய்களைக் களைவதில் இம்மருத்துவத்துறைப் புரட்சி ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக நோயாளிக்கு நோயின் அறிகுறிகள் வெளியில் தெரிவதற்கு முன்பே அவருக்கு நோய் தோன்றக்கூடிய வாய்ப்புகளை மிகத் தெளிவாகக் காண்பித்து விடும்.



● க. ராஜ்குமார், கிருஷ்ணகிரி

? பெருமூச்சு ஏன் ஏற்படுகிறது? இது ஒரு நோயா? என்ன சிகிச்சை?

! பயம், பதற்றம், கோபம், கவலை போன்ற உளவியல் உணர்ச்சிகளின் தூண்டுதல்களால் பெருமூச்சு ஏற்படுகிறது. மனம் தளர்ச்சியடையும்போது மூளைக்

கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்

குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைகிறது. இதனால் பிராணவாயுவின் அளவும் குறைகிறது. கரியமிலவாயுவின் அளவு அதிகரிக்கிறது. உடனே மூளையிலுள்ள சுவாச மையம் தூண்டப்படுகிறது. 'எனக்கு நிறைய பிராண வாயு தேவைப்படுகிறது; சீக்கிரம் அனுப்பு' என்று நுரையீரலுக்கு மூளை கட்டளையிடுகிறது. இதனால் சுவாசத்தின் வேகம் அதிகரிக்கிறது; பெருமூச்சு ஏற்படுகிறது. பயம் பதற்றநோய் (Anxiety), அச்ச நோய் (Phobia) போன்ற மனத்தளர்வு நோய்களின் வெளிப்பாடாக இது தோன்றலாம். பெருமூச்சு மட்டும் தனியொரு நோயாகாது. அடிக்கடி பெருமூச்சு ஏற்பட்டால் தகுந்த பரிசோதனைகள் மூலம் உடலில் வேறு ஏதேனும் நோய்கள் (எ-டு) ரத்தசோகை, ஆஸ்துமா, இதயநோய்) உள்ளனவா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பெருமூச்சைப் போக்க மனவழி மருத்துவம், மன அமைதி தரும் மருந்துகள், சுவாசப் பயிற்சிகள், யோகாசனப் பயிற்சிகள், தியானம் ஆகியவை உதவும்.



● ஆர். மகாதேவன், பாண்டிச்சேரி.

? புற்றுநோய் ஒரு தொற்றுநோயா? குழந்தைகளுக்கும் புற்றுநோய் வருமா?

! புற்றுநோய் தொற்றுநோயல்ல. குழந்தைகளுக்கும் புற்றுநோய் வரலாம். குறிப்பாக பிறவிக்குறைபாடுள்ள குழந்தைகளுக்கு, நோய் எதிர்ப்புத்திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கு,

மரபணுக்குறைபாடுள்ள (Chromosomal disorder) குழந்தைகளுக்கு புற்றுநோய் வரும் வாய்ப்புகள் மிகுதி. சில வைரஸ் கிருமிகளின் பாதிப்பினாலும், சில மருந்துகளின் பின்விளைவாகவும் குழந்தைகளுக்குப் புற்றுநோய் ஏற்படலாம். நிணநீர்க் கட்டி, இரத்தம், சிறுநீரகம், கல்லீரல், கண் ஆகிய உறுப்புகளில் இவர்களுக்கு புற்றுநோய் ஏற்படலாம். இவற்றில் 'வில்ம்ஸ் கட்டி' (Wilm's Tumour) எனும் புற்றுநோய்தான் குழந்தைகளுக்கு அதிகமாக வரக்கூடியது. இரத்தப் புற்று நோய்க்கு எலும்பு மஜ்ஜை மாற்றுச் சிகிச்சை (Bone Marrow Transplantation) நல்ல பலன் தரும். இதர புற்றுநோய்களுக்கு மருத்துவச் சிகிச்சையும் கதிரியக்கச் சிகிச்சையும் உதவும்.





● இரா. சரஸ்வதி, மயிலாடுதுறை.

? மனிதன் இனிப்பு சாப்பிடாமல் வாழ முடியுமா?

இனிப்பு சாப்பிடாமல் வாழ முடியுமா?



! இனிப்பு என்று பொதுவாக கேட்டுள்ளீர்கள். இனிப்பு என்பதைச் 'சுவை' என எடுத்துக்கொண்டால் மனிதன் இனிப்புச் சுவையைத் தவிர்த்து வாழ இயலும். இனிப்பு என்பதைச் 'சர்க்கரை' (Sugar) என எடுத்துக்கொண்டால் இனிப்பு இல்லாமல் வாழவே இயலாது என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அரிசி, கோதுமை போன்ற தானியங்கள் ஆனாலும் சரி. பழம், காய், தேன் போன்ற இயற்கை உணவுகள் ஆனாலும் சரி மனிதன் சாப்பிடுகின்ற எல்லா உணவுகளிலும் சர்க்கரை இருக்கத்தான் செய்யும். மேலும் மனித உடல் சர்க்கரை இல்லாமல் வளர்ச்சி பெற இயலாது; சக்தியைப் பெற இயலாது. இவ்வளவு ஏன்? மனித மூளை சர்க்கரை இல்லாமல் மூன்று நிமிடங்களுக்கு மேல் உயிருடன் இருக்காது.

● ச.க. குமார், சென்னை - 60

? குழாய் மாத்திரைகளில் (Capsule) உள்ள குப்பி எதனால் ஆனது? அது எவ்வாறு மருந்தை வெளிப்படுத்துகிறது?

! குழாய் மாத்திரைகளில் உள்ள குப்பி கோதுமை ஸ்டார்ச்சினால் தயாரிக்கப்படுகிறது. இது வயிற்றை அல்லது சிறுகுடலை அடைந்ததும் செரிமானமடைந்து விடும். இதனால் அதற்குள் இருக்கும் மருந்தும் செரிமானமாகி இரத்தத்தில் கலந்து விடும். மருந்து வேலை செய்யும்.

3 அருள்மொழியின் வீரம்!



நாய் தன்னை நோக்கிப் பாய்வதைப் பார்த்த அருள்மொழியின் அறிவும் உடம்பும் ஒரே நேரத்தில் வேலை செய்தன.

அருள்மொழியின் உடம்பு, காலைத் தொடக் கீழே குனியும் உடற்பயிற்சி போலச் சடாரென்று மடிந்தது! உயரம் பாதியாகக் குறைந்தது. அதனால் அவன் கழுத்தைக் குறி வைத்துப் பாய்ந்த நாய் குறியை மாற்றிக் கொள்ள நேரமில்லாமல், வேகத்தைக் குறைத்துக் கொள்ள வழியில்லாமல், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாகச் சீறி மோதிய வேகத்தில் தடார் சத்தத்தோடு தரையில் விழுந்தது.

தாராகரம் பெரிய நகரமல்லதான். என்றாலும் அங்கேயும் கராத்தே வகுப்புகள் நடந்தன. அருள்மொழி அதிலே 'பிரௌன் பெல்ட்' பெற்றவன்.

கேட்டில் மோதி ஓரளவு உடல் வலியோடு முனகியபடி தரையில் விழுந்த நாய், இலக்குத் தப்பிய கோபத்தோடு, தனக்கு இம்சை ஏற்பட்ட சோகத்தோடு மிக விரைவாக எழ முயன்றது. அந்த வேகத்தில் பின் கால்கள் வழுக்க அந்த நாய் மீண்டும் கீழே விழுந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சடாரென்று எழுந்து நின்ற அருள்மொழி, இருகேட்டையும் இணைத்துப் பிடித்து, அதில் தொங்கிய கொக்கியை உயர்த்தி மாட்டிவிட்டு கேட்டின் அடியில் பார்த்தான். ஒரு கேட்டின் செங்குத்தான தாழ்ப்பாள் தரையில் தனக்காக அமைக்கப்பட்ட இரும்புக் குழாய்க்குள் இறங்கி நிற்பதைக் கண்டான். அப்போதுதான் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

அதற்குள் அந்த நாய் மீண்டும் எழுந்து ஓடி வந்து, கேட்டைத் திறக்க முயல்வது போல தன் முன் கால்கள் இரண்டையும் உயர்த்தி கேட்டின் மீது படிய வைத்து நின்று குலைத்தது.

கேட் அசைந்தது! ஆனால் திறக்கவில்லை!

அதே நேரத்தில், "சபாஷ் ராஜா! சபாஷ்!" என்ற குரலும், ஒற்றைக் கரவொலியும் கேட்டன.

அருள்மொழி ஒலி வந்த திசையில் திரும்பிப் பார்த்தான்.

அவன் நின்ற வீட்டுக்கு எதிர்வீட்டின் மொட்டை மாடியில் நின்றபடி ஒருவன், இன்னும் கைதட்டிக் கொண்டிருந்தான்.

கேட்டுக்குப் பின்னே நாய் இன்னும் குரைத்துக் கொண்டிருந்தது.

டாக்டர் பூவண்ணன்



அக்னிக் குஞ்சுகள்!

அருள்மொழி முதலில் கேட்டின் முன்னே நிற்பதைத் தவிர்க்க விரும்பி, பக்கவாட்டில் வடக்கு நோக்கி நகர்ந்து காம்பவுண்டு சுவரின் அருகே சென்றான்.

இப்போது நாயால் அவனைச் சரியாகப் பார்க்க முடியாது. என்றாலும் நாயின் குரைப்பு, தொடர்ந்து கொண்டிருந்தது.

அருள்மொழி, மொட்டை மாடியில் கைதட்டியபடி நின்றவனைப் பார்த்தான். அவன், ''சபாஷ், ராஜா...'' டைலாக்கைத் திரும்பவும் சொன்னபடி, கை தட்டிக் கொண்டிருந்தான்.

அவனை அருள்மொழிக்குத் தெரியும். அவன் வகுப்பு மாணவன், பெயர்...? சட்டென்று நினைவுக்கு வரவில்லை.

அருள்மொழி அவனைப் பார்த்து, "தேங்ஸ்... ஃபிரண்ட்" என்றான்.

"கொஞ்சம் இரு. அருள் மொழி. நான் இறங்கிக் கீழே வறேன்" என்றபடி அவன் மாடியிலிருந்து மறைந்தான்; சில நொடியில் அந்த வீட்டின் கீழ்த்தள வாயில் வழியாக வெளிப்பட்டான். அருள்மொழியின் அருகே வந்தான்.

''நீ நாயுடன் மோதிப் போரிட்ட சாகசத்தை மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். நீ நம் தமிழ் ஐயாவின் வாக்குப்படி ராஜராஜன்தான்!" என்றான்.

அருள்மொழி "நன்றி நண்பா, நன்றி! உன் பெயர்...'' என்றிழுத்தபோது, வந்தவன் "ஞாபகம் இல்லையா? பாலு... பாலசுந்தரம். ..!' என்றான்.

"பாலு! இது உன் வீடுதானே, உள்ளே

வந்து முகம், கை, கால் அலம்பிக் கொள்ளட்டுமா?" அருள்மொழி, தன் உடம்பை ஒரு நோட்டம் விட்டபடி கேட்டான்.

"வா, அருள்மொழி! கை கால் அலம்பிக் கொள்வதோடு ஒரு கப் சூடான காபியும் சாப்பிட்டுப் போகலாம்" என்று அழைத்தான்.

அருள்மொழி அந்த அழைப்பை ஏற்று, அவனுடன் செல்ல ஓரடி வைத்தவன் நின்று, பின்னால் திரும்பிப் பார்த்தான். அவன் சைக்கிள் காம்பவுண்ட் ஓரத்தில் நின்றிருந்து. அவன் அருகே சென்று, 'லாக்' செய்து சாவியை பாக்கெட்டில் போட்டுக் கொண்டு பாலுவுடன் சென்றான்.

நாயால் அவனைச் சரியாகப் பார்க்க முடியாது. என்றாலும் நாயின் குரைப்பு, தொடர்ந்து கொண்டிருந்தது.

அருள்மொழி தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு வர, பாலுவின் தாய் சூடான காபி நிறைந்த கப்புடன் அங்கே வந்தார். "என்ன கண்ணு, நாயோடு சண்டை போட்டாயாமே? நாய் எங்கேயாவது கடிச்சிட்டுதான்னு பாரு! நாய் கடிச்சா இருபத்தோரு ஊசி போடணுமாமே!" என்றபடி பேரன்போடு, அக்கறையோடு கேட்டுக் கோப்பையை நீட்டினார்.

அதை வாங்கிக் கொண்ட அருள்மொழி, "இல்லைங்கம்மா! நாய் கடிக்கலே! அதன் நகங்கூட என்மேலே படலே" என்றான்.

வேறொரு அறையிலிருந்து வந்த பாலு, "அம்மா அந்த நாய்தான் பாவம்! இவனைத் தாக்க வந்து இவனைத் தொட முடியாம, கேட்டிலும் தரையிலும் முட்டி மோதி உடம்பெல்லாம் காயம் பட்டிருக்க வேண்டும். இவன் வீராதி வீரன்ம்மா! சோழ மகா ராஜான்னு எங்க ஆசிரியர் பேர் வைச்சிருக்காரு" என்றான்.

"பாலு, அளவுக்கதிகமா பாராட்டி, கொஞ்சம் இருக்கிற தைரியத்தையும் பொய்யாக்கிடாதே" என்றபடி அருள்மொழி காபியைச் சுவைத்தான்.

"அருள்மொழி, நீ இங்கே ஏன் வந்தே? எதிர்வீட்டிலே உனக்கென்ன வேலை?" பாலு கேட்க, தான் அங்கே வரச் செய்த கார்டைக் காட்டினான் அருள்மொழி. அதை வாங்கிப் பார்த்தான் பாலு.

"அருள்மொழி, கார்டு சொல்லும் முகவரிதான், எதிர்வீட்டு முகவரி. எதிர் வீட்டில், இந்த கார்டு எழுதிய சாரதின்னு யாரும் இல்லே. இப்பவும் இல்லே! எப்பவும் இல்லே! இந்த வீட்டிலேயிருந்த குடும்பம் ஆஸ்திரேலியாவுக்குப் போயாச்சு! மூணு வருஷம் முடிஞ்சுதான் வரும். இப்போ காவல்காரர் மட்டுந்தான் இங்கே இருக்கார். பங்களா பின்னாலே பெரிய தோட்டம் மாமரம், கொய்யா முதலான பழ மரம் இருக்கிறதாலே, தெருப் பசங்க உள்ளே போயிடுவாங்க. அதனாலே தான், நாயைக் காவல்காரர் பொறுப்பிலே விட்டுட்டுப் போயிருக்காங்க. காவல்காரர் வெளியே போகும்போது நாயை அவிழ்த்து விட்டுடுவாரு. அருள் நீ உன் வீர தீரத்தாலே தப்பிச்சுட்டே... அது சரி தப்பான முகவரிக்கு உன்னை யார் வரவழைச்சிருப்பாங்க?" பாலு

அதுதான் அருள்மொழிக்குப் புரியவில்லை.

அருள்மொழி, பாலுவிடம் விடை பெற்றுக் கொண்டு, அவன் தாயாருக்கு நன்றி தெரிவித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

அருள்மொழியை எதிர்பார்த்துக் காத்திருந்த இளங்கோவும், நெடுமாறனும் அவன் திரும்பி வந்த நிலையைக் கண்டு பதறினார்கள். அருள்மொழி நடந்ததைக் கூறக் கேட்டதும் பயந்தார்கள்.

"அருள்மொழி, நமக்கெதிராக யாரோ சதி செய்யறாங்க. நாம துன்பப்பட்டு நம்ம முயற்சியைக் கைவிட்டு விடணும்னு யாரோ சூழ்ச்சி செய்யறாங்க" என்றான் இளங்கோ.

"இருக்கலாம்... ஆனால் அப்படி செய்யறவங்க யார்? அதைச் சொல்லு பாக்கலாம்" என்று கேட்டான், நெடுமாறன்.

அந்த நேரத்தில் மாடி வீட்டு பல்லவி கையில் நான்கு புத்தகங்களோடு அங்கு வந்தாள். அவை, மூவேந்தர் தமிழ்ச் சங்கத்தின் புக் பாங்க்குக்காக அவள்

திரட்டி வந்த பழைய புத்தகங்கள்.

"ஹாய் பிரண்ட்ஸ்...!" என்று கூறிய பல்லவி "சாரி, ஹாய்... மூவேந்தர்!" என்று கிண்டல் குரலில் கூறினாள். அவளது வழக்கமான கிண்டல் இது என்றாலும் வழக்கமாக மூவரும் இதை ரசிப்பார்கள்!

"பல்லவி உனக்கு எந்த ஊர் சொந்த ஊர்?' என்று கேட்டான், இளங்கோ.

உடனே பல்லவி, "நான் பிறந்த ஊர், காசியைவிட சிறந்ததான காஞ்சி... காஞ்சி புரம்!" என்றபடி கற்பனையான காலரைத் தூக்கி விட்டுக் கொள்வது போல பாவனை செய்தாள்.

"காஞ்சிபுரமா? நீ சொன்னதை எங்க தமிழய்யா கேட்டிருந்தா, என்ன சொல்லி யிருப்பார் தெரியுமா? உன் ஊர் காஞ்சி புரமா? அது பல்லவ நாடு! அதனால் நீ பல்லவன்னு சொல்லியிருப்பார்'' என் றான் இளங்கோ.

"பல்லவன் ஆண் பால் இளங்கோ" என்று நெடுமாறன் நினைவூட்ட, "சாரி! பல்லவன் அல்ல! பல்லவி!'' என்று திருத்திச் சொன்னான் இளங்கோ.

''அப்போ பல்லவியைச் சேர்த்தால். நாம் நால்வேந்தர், வேந்தர் பொதுப்பால்! அதனால் நால்வேந்தர் என்பது சரி'' என்றான் அருள்மொழி.

பல்லவியும் மூவேந்தர் தமிழ்ச்சங் கத்தில் நாலாவதாகச் சேர்ந்து விட்டாள்.

மூவரும் ஏதோ சோகத்தில் இருப்பது தெரிந்தது.

விசாரித்தாள் பல்லவி.

விளக்கினான் அருள்மொழி.

"எங்கே, அந்த கார்டைக் காட்டு, பார்க்கலாம்"

பல்லவி கேட்க, "கார்டைப் பார்த்து என்ன செய்யப் போறே?" என்று கேட் டான் அருள்மொழி.

வாய் கேட்டாலும், கை அவனது பாக் கெட்டிலிருந்து கார்டை எடுத்து நீட்டியது.

பல்லவி அதை வாங்கிப் பார்த்தாள். கடிதத்தைத் திருப்பிப் பார்த்தாள்.

பார்த்தவள், "இந்தக் கடிதத்தை நான் பார்த்திருந்தா அருள்மொழிக்கு இவ்வளவு தொல்லை வந்திருக்காது" என்றாள்.

மூவேந்தர்கள் இதைக் கேட்டு திகைத் தார்கள். 'நாம் கவனிக்காத ஏதோ ஒரு 'க்ளு' கடிதத்தில் இருக்குமோ? நினைத்த படி இளங்கோ அந்தக் கடிதத்தைப் பறித்துப் பார்த்தான்.

(தொடரும்)



★ தமிழ் வளர்த்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் - அருள் நம்பி - பக். 132 - ரூ.25 - குட் புக்ஸ் பப்ளிகேஷன்ஸ், பிளாட் நம்பர் ஏஏ 96, பிள்ளையார் கோவில் எதிரில், அண்ணா நகர், சென்னை - 600 040.

தவசீலராகவும் தமிழ் வளர்க்கும் பல்கலைக் கழகமாகவும் மக்கள் தொண்டராகவும் வாழ்ந்து வரலாறு படைத்த அடிகளாரின் வாழ்க்கை வரலாறு. இளைய தலைமுறையினர் வழிகாட்டியாகக் கொள்ளத்தக்க படைப்பு.

★ புதுநெறி காட்டும் புத்தர் கதைகள் - பாலமுருகன் - பக். 80- ரூ.15 - குறிஞ்சி - 20ஏ, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 600 049.

நன்னெறி காட்டும் உலகப் புகழ்பெற்ற புத்தர் ஜாதகக் கதைகளிலிருந்து பொறுக்கி எடுத்த மணிக் கதைகளின் தொகுப்பு. படங்கள் சிறப் பூட்டுகின்றன.

அரிய மனிதர்

மகாதேவ தேசாய்!



★ மகாதேவ தேசாய் - எம். வி. வெங்கட்ராம் - பக். 58-ரூ.15 - பழனியப்பா பிரதர்ஸ், 14, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14.

எல்லாவற்றையும் துறந்துவிட்டு காந்தியடிகளின் தொண்டராக 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொண்டாற்றிய எளிய அரிய மனிதரின் வாழ்க்கை. காந்தியடிகளே இவரது இறுதிச் சடங்கைச் செய்தார் என்பதே அவரது தொண்டை விளக்கப் போதுமானது. இப்படிப்பட்ட தன்னலமற்ற மனிதர்களின் தியாகத்தால் கிடைத்ததே சுதந்திரம் என்பதை இளைய தலைமுறையினர் உணர வேண்டியது அவசியம். அதற்கு இந்த நூல் பெரிதும் உதவும்.

★ குழந்தைகளுக்கான நல்ல கதைகள் - சைதை செல்வராஜ் - பக். 96 - ரூ.18/- அழகு பதிப்பகம், 20, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 600 049.

மனித நேயத்தின் அவசியம், சிறு உயிரும் ஆபத்தில் உதவும், கெடுவான் கேடு நினைப்பான் என்பதுபோன்ற நல்வழி காட்டலின் அவசியத்தை உணர்த்தும் கதைகளின் அழகிய தொகுப்பு. படங்கள் நன்று.

★ நீதிநூற் கொத்து - மதியரசு - பக்.100 - ரூ.20/- - குறிஞ்சி, 20, ஏ. ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 600 040.

ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய ஏழு நூல்களின் ஆசிரியர்களைப் பற்றிய குறிப்பும் நூல்களின் மூலமும் எளிய நடையில் கருத்துரையும் தரப்பட்டுள்ளன. தேவையான இடங்களில் பொருட் குறிப்பும் உண்டு.

- ரே

புதிர் உலகம் விடைகள்

I. மாணவர்கள் : 48; பெஞ்சு : 15

15 x 3 = 45 + 3 = 48 மாணவர்கள்.

48/4 + 3 = 12 + 3 = 15 பெஞ்சுகள்.

II. 2520

III. எல்லாரும் கன்றின் விலை 50 ரூபாய் என்று சொல்வார்கள். அது தவறு! கன்றின் விலை 25 ரூபாய்.



மாட்டின் விலை =	525 ரூபாய்
கன்றின் விலை =	25 ரூபாய்
வித்தியாசம் =	500 ரூபாய்

IV. 64 பழங்கள்

V. ஒற்றுமையே பலம்

குட்டை வால்ஷ்!

ஷார்ஜா கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா பங்கேற்கவில்லை. இதனால் இலங்கை, பாகிஸ்தானுடன் நியூசிலாந்து அணி பங்கேற்றது. இதில் இலங்கையும் பாகிஸ்தானும் இறுதிப் போட்டியில் விளையாடின. ஷார்ஜாவில் பாகிஸ்தான் அணியை வெல்வது கடினம் என்று சொல்வதுண்டு. இந்நிலையில் டாஸ் வென்று இலங்கை அணி முதலில் பேட்டிங் செய்தது. 50 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 297 ரன்களைக் குவித்தது இலங்கை. ஜெயசூர்யா 70 ரன்களும், அட்டப்பட்டு 89 ரன்களும், ஜயவர்த்தன 67 ரன்களும் எடுத்தனர். 298 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கில் ஆடத் துவங்கிய பாகிஸ்தான் 41.4 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 220 ரன்களை மட்டுமே சேர்த்து தோல்வியைத் தழுவியது.

பாகிஸ்தான் அணியில் சயீத் அன்வர் மட்டும் 62 ரன்கள் எடுத்தார். அவரின் விக்கெட்டை ஜெயசூர்யா வீழ்த்தியதன் மூலம் ஒரு தினப் போட்டிகளில் 200வது விக்கெட்டை அவர் எடுத்தார்.

• ரஹ்மான்



• ஜெயசூர்யா



• வால்ஷ்



ஓய்வு

மேற்கிந்திய கிரிக்கெட் அணியின் புகழ்பெற்ற பந்து வீச்சாளர் கோர்ட்னி வால்ஷ் ஓய்வு பெற்று விட்டார். 17 ஆண்டுகளாக விளையாடி வந்த வால்ஷ் 132 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று மொத்தம் 519 விக்கெட்டுகளைச் சாய்த்திருக்கிறார். இது உலக சாதனை. மேற்கிந்திய தீவு மக்களும் உலக கிரிக்கெட் ரசிகர்களும் அன்புடன் பிரியா விடை கொடுத்துள்ளனர். மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் வாரியம் வால்ஷ் உருவச் சிலையை அவருக்குக் கொடுத்து கௌரவித்துள்ளது.

குத்துச் சண்டை

தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஜோகன்னஸ்பர்கில் உலக ஹெவி வெயிட் குத்துச் சண்டை போட்டிகள் நடைபெற்றன. இதில் உலக சாம்பியனாக விளங்கிய பிரிட்டனின் லென்னாக்ஸ் லூயிஸ்ஸும் அமெரிக்காவின் ஹஸீம் ரஹ்மானும் மோதினர். இருவருக்கும் இடையில் கடுமையாக மோதல் நடைபெற்றது. ஐந்தாவது சுற்றில் லூயிஸைத் தோற்கடித்து 28 வயதான ரஹ்மான் வெற்றி பெற்றார். இதன் மூலம் உலகக் குத்துச் சண்டை கவுன்சில் மற்றும் சர்வதேச குத்துச் சண்டை ஃபெடரேஷனின் ஹெவி வெயிட் சாம்பியன் பட்டத்தையும் கைப்பற்றியிருக்கிறார் ரஹ்மான்.

இதயத்தில் ஒளிந்து கொண்டவர்!

பிரதிஷ்டானம் என்ற நகரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர் கூர்மர். பிறவியிலேயே முடமான இவர் ஆமை போல் ஊர்ந்து சென்றதால் கூர்மர் என்று அழைக்கப்பட்டார். பண்டரி புர மகிமையை ஒருமுறை கேட்டார். அது முதல் பண்டரிபுரம் போகும் ஆசை வளர்ந்தது.

'பாண்டுரங்கா, உன்னை நம்பித்தான் வருகிறேன்' என்று ஊர்ந்து ஊர்ந்து புறப்பட்டுவிட்டார். உடலெல்லாம் புண்ணாக ஒரு ஆஞ்சனேயர் கோவில் மண்டபத்தில் மூர்ச்சித்தார். முகத்தில் 'ஜில்'லென்ற நீர்த்துளிகள் விழ மயக்கம் தெளிந்தது.

எதிரே ஒரு வயதான அந்தணர் நின்றிருந்தார். அவர் கையிலிருந்த நீர் கெண்டி மயக்கம் தெளிவித்தவர் அவரே என்று அறிவித்தது.

"அப்பனே, எங்கே போகிறாய்?" என்று விசாரித்தார்.

"பண்டரிபுரம்" என்றார் கூர்மதாஸர்.

"ரொம்ப நல்லதாப் போச்சு. நானும் அங்குதான் போகிறேன். சாப்பிடாமல்கூட இருந்து விடுவேன். பேசாமல் என்னால் இருக்க முடியாது. என் பெயர் விட்டல். எனக்குக் கொஞ்சமாகச் சமைக்கத் தெரியாது. வீணாகாமல் சாப்பிட நீ அகப்பட்டாய். பண்டரிபுரத்தில் வெண்ணைக்கடை வைத்திருக்கிறேன்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.


கூர்மர், 'எல்லாம் பாண்டுரங்கன் மகிமை' என்று நினைத்தார். பண்டரிபுரத்துக்கு இரண்டு காத தூரத்தில் வகுளாபுரி என்ற ஊரில் பிரிந்து சென்றார் விட்டல்.

மறுநாள் கார்த்திகை மாத ஏகாதசி. பஜனைக் கோஷ்டியினர் தன்னைக் கடந்து செல்வதை ஏக்கத்தோடு பார்த்தார்.

பெண்டி என்ற கிராமத்தில் சாமந்தன் என்ற ஹரிபக்தன் நந்தவனத் திருப்பணி செய்து கொண்டிருந்தான். தினமும் பூப் பறிக்கும்போது 'ஸ்வாமி! ஒரு நாளாவது என் இதயத்தில் வந்து குடியேற மாட்டீர்களா?' என்று வேண்டுவான்.

கூர்மர் 'பகவானே! நீங்கள் மனம் வைத்தால் இந்த ஏகாதசிக்கே தரிசனம் தரலாம். நானாக வருவதானால் அடுத்த ஏகாதசிதான்' என்று பிரார்த்தித்தார்.

நாமதேவர், ஞானசுவரர்



என்ற இரு பக்தர்களும் பகவானை நேரில் காணும் பாக்கியம் பெற்றவர்கள்.

கூர்மருக்குத் தரிசனம் கொடுக்க இரு பக்தர்களுடனும் புறப்பட்டு வந்தார் பண்டரிநாதர். சாமந்தனின் நந்தவனம் வந்ததும் 'இங்கே இருங்கள்' என்று சொல்லிவிட்டு நந்தவனத்துக்குள் சென்றார் பகவான்.

சங்கு சக்கரத்தோடு வந்த பரந்தாமனைக் கண்டு திகைத்துப் போய் நின்றான் சாமந்தன்.

''சாமந்தா! இரண்டு திருடர்கள் துரத்துகிறார்கள். ஒளிந்து கொள்ள இடம் கொடு'' என்றார் பாண்டுரங்கன்.

''சரி, குடிசையில்



ஆர். பொன்னம்மாள்

இருங்கள் , என்னை மீறி எவரும் வர முடியாது" என்றான் சாமந்தன்.

"அவர்களைப் பற்றி உனக்குத் தெரியாது. நான் உன் இதயத்தில் மறைந்து கொள் ளட்டுமா?" என்று கேட்டார் பகவான்.

இதயத்தைக் கிழித்தான் சாமந்தன். பகவான் சிறிய வடிவெடுத்து உள்ளே அமர்ந்து கொண்டார். இதயம் மூடிக் கொண்டது. சாமந்தன் கண்கள் விழித் திருந்தன. ஆனால் எதிரில் இருப்பது எது வும் தெரியாமல் சிலையாய் இருந்தான்.

நாமதேவரும், ஞானேசுவரரும் பகவானைத் தேடிக் கொண்டு நந்தவனத் துள் நுழைந்தனர். சாமந்தனின் நிலையைப் பார்த்ததுமே நாமதேவருக்கு விஷயம் புரிந்து விட்டது. "ஸ்வாமி! சாமந்தன் இதயத்திலிருந்து வெளியே வந்தால்தானே கூர்ம தாஸருக்குத் தரிசனம் தரமுடியும்! எதற்காகப் புறப்பட்டோம் என்பதே மறந்து போயிற்றா?" என்று பிரார்த் தித்தார்.

சாமந்தன் இதயத்திலிருந்து அவனுக்கு வலிக்காமல் இரத்தம் சிந்தாமல் வெளிப் பட்டார் பரந்தாமன். நால்வருமாக கூர்ம தாஸர் இருக்குமிடத்திற்குச் சென்றனர்.

பகவான் அந்தணர் வடிவில் அவர் முன் தோன்றி, "தோலெல்லாம் வறண்டு விட்டதே! ஏன் இந்த அவசரம்?" என்று கேட்க,

"வழியை மறிக்காதீர்கள்! ஏகாதசி முடிவதற்குள் என் ரங்கனை தரிசிக்க வேண்டும்" என்றார் கூர்மர்.

அதற்குள் நாமதேவரும், ஞானேசு வரரும், சாமந்தரும் வர பகவான் சங்கு, சக்கரம், பத்மத்தோடு காட்சி கொடுத்தார்.

"பகவானே! என்னைப் போல் நடக்க முடியாதவர்களுக்காக இங்கேயே கோவில் கொள்ள வேண்டும்!" என்று வேண்டினார் கூர்மர்.

கார்த்திகை ஏகாதசிக்குப் பண்டரிபுரம் செல்பவர்கள் வகுளாபுரி இறைவனை தரிசனம் செய்துவிட்டே பாண்டு ரங்கனை வழிபடுவார்கள்.

கோகுலம் க்விஸ் முடிவு

ஏப்ரல் மாத க்விஸ் போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டு, சரியான விடைகளையும் அளித்திருந்தனர். எனவே பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. உ. சங்கரலிங்கம், பூஞ்சேரி, காஞ்சிபுரம்.
2. சி. முத்துரெட்டி, சிறுகனூர், திருச்சி.
3. அ. விஜய்குமார், தொரப்பாடி, வேலூர்
4. சி. நடராஜன், தின்னப்பட்டி, தருமபுரி.
5. ப. முவீன், ஜாகிர் ரெட்டிபட்டி, சேலம்
6. எழில் பி.வேல்விழி, புதுபெருங்களத் தூர், சென்னை.
7. ஆர். நவீன்பிரசாத், பச்சூர், வேலூர்.
8. என். விசு, கூறைநாடு, மயிலாடுதுறை.
9. நீ. நீரஜ், திண்டுக்கல்.
10. த. சிவபாரதி, மல்லிபாளையம், ஈரோடு.
11. பி. ஹேமா, காஞ்சிபுரம்.
12. எம். ரகுராம், தாம்பரம் கிழக்கு, சென்னை – 45.
13. கோ. செந்தமிழ்ச் செல்வி, காஞ்சிபுரம்.
14. வெ. நடராஜன், திம்மராஜபுரம், திருநெல்வேலி.
15. அ. சுபா, பொம்மிடி, தர்மபுரி.
16. ம. பிரபு கிருஷ்ணா, ஓசூர், தருமபுரி.
17. எஸ். அபிஷேகா, உசிலம்பட்டி, மதுரை.
18. பா. இலக்கியா, பட்டுக்கோட்டை
19. பி.பி. கிருஷ்ணபிரசாத், சேலம்.
20. வி. அஜய் ராஜா, இராமநாதபுரம்.

சரியான விடை :

1. சுதந்திர தேவி சிலை உள்ள இடம் நியூயார்க்.
2. டால்ஃபின்கள் திமிங்கலம் வகையைச் சேர்ந்தவை.
3. இலங்கையின் தலைநகர் கொழும்பு.
4. கபில்தேவின் உலக சாதனையை முறியடித்தவர் வால்ஷ்.
5. பெரிய புராணத்தை இயற்றியவர் சேக்கிழார்.
6. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் கயத்தாறு.
7. வைகை நதி மதுரை மாவட்டத்தில் பாய்கிறது.
8. தமிழ்த் தாத்தா என்று அழைக்கப்பட்டவர் உ.வே. சாமிநாத ஐயர்.
9. ஆகாயத் தோட்டி காகம்.
10. பூமிக்கு ஒரு துணைக்கோள் உள்ளது.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



குளிரிலிருந்து பாதுகாக்கும் உறுப்பு!

'முடி' என்றால் எல்லோரும் கேவலமாக நினைப்போம். அந்த முடியினால் எவ்வளவு நன்மை என்பது எத்தனை பேருக்குத் தெரியும்..? பாலூட்டிகளின் முக்கிய பண்பே உடல் முழுவதும் ரோமத்தால் மூடப்பட்டிருப்பதுதான். முடியின் முக்கிய வேலையே, உடல் வெப்பத்தைப் பாதுகாப்பதுதான். வெப்ப ரத்தப் பிராணிகள் தம் உடலைக் குளிரிலிருந்து பாதுகாக்க உடல் முழுவதும் பரவலாக இருக்கிற முடிதான் பெரிதும் உதவுகிறது. மற்ற பாலூட்டிகளை ஒப்பிடும்போது மனிதனுக்கு மட்டும்தான் முடி குறைவாக உள்ளது. நமது மூதாதையரான குரங்கினங்களுக்குக்கூட நிறைய முடி உண்டு. மனிதன் வீடு கட்டி வாழ நேர்ந்ததாலும், நெருப்பின் பயன் அறிந்ததாலும், உடைகள் மூலம் தம்மை மறைத்துக் கொண்டதாலும், குளிரிலிருந்து காப்பாற்றிக் கொண்டான். இதனால் பரிணாம வளர்ச்சியில், காலப் போக்கில் உடல் மேலிருந்த முடியின் அளவு குறைந்துவிட்டது.

முடி எதனால் ஆனது? தோல்தான் முடியாகவும், நகமாகவும் உருமாறியுள்ளது. முடி தோலின் அடிப்பகுதியில் உருண்டையான மின்விளக்குப் போன்ற வேர்ப்பகுதியிலிருந்து உருவெடுக்கிறது. ஒவ்வொரு முடியும் அங்கிருந்து வெளிவரும் அடித்தண்டிலிருந்து, நீண்டு தோலைத் துளைத்துக் கொண்டு வெளிவருகிறது. முடி 'கெரோடின்' என்ற சிறப்பு புரதத்தால் ஆனது. அதிலுள்ள 'மெலனின்' என்ற நிறமி செல்கள் முடிக்கு நிறத்தைத் தருகின்றன. இதில் கறுப்பு மற்றும் சிவப்பு நிற நிறமிகள் உண்டு. இந்த இரு நிறமிகளின் கலவை காரணமாகத்தான் முடிகளில் கறுப்பு, பழுப்பு, சிவப்பு, செம்பட்டை மற்றும் வெள்ளை என பல நிறங்கள் உள்ளன. கறுப்பு நிற முடியில் கறுப்பு நிறமி, பழுப்பு நிற முடியில் கொஞ்சம் கறுப்பும், கொஞ்சம் சிவப்பு நிறமியும், சிவப்பு முடியில் சிவப்பு நிற நிறமி மட்டுமே உள்ளது. வெள்ளை நிற முடியில் நிறமியே கிடையாது. முடியின் நிறம் பரம்பரை வழியாகவே வரும். இந்தியர்களின் முடி கறுப்பாகவும், ஐரோப்பியர்களின் முடி செம்பட்டையாகவும், செவ்விந்தியர்களின் முடி சிவப்பாகவும், அமெரிக்கர் மற்றும் ரஷ்யர்களில் பெரும்பாலும் வெள்ளையான முடியாகவும் இருப்பது இதனால்தான்.

முடியின் வேர்ப்பகுதியைச் சுற்றி 'செபம்' என்னும் எண்ணெயைச் சுரக்கும் சுரப்பி உள்ளது. இதுதான் நம் தோலையும்,

முடியையும் நீரில் ஊறி விடாமல் பாதுகாக்கிறது. அது மட்டுமல்ல உங்கள் அழகு மேனி பளபளக்கவும், முடி பட்டு போல் மென்மையாக மினுமினுக்கவும் வைப்பது முடிக்காம்பைச் சுற்றியுள்ள செபசுரப்பிகளே. மயிர்க்கால்களின் வேர்ப்பகுதி தசையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. குளிரில் தசை சுருங்கும்போது அதனுடன் இணைத்துக் கட்டப்பட்டிருக்கும் முடியின் வேர்ப்பகுதி இழுக்கப்படுவதால் ரோமம் 'குத்திட்டு' எழுந்து நிற்கிறது. இதனை உடல் புல்லரிக்கிறது என்கிறோம். இவ்வுணர்ச்சி, பாலூட்டிகளைக் குளிரிலிருந்து பாதுகாக்க ஏற்பட்ட



செயல்பாடாகும். இச் செயல்பாடு, இப்போது நமக்கு அவ்வளவாக உதவவில்லை என்றாலும், இச் செயல்மட்டும் எச்சமாய் நம்மிடையே நின்றுவிட்டது!

கோரைமுடி, லேசாக சுருண்ட முடி, அலையான முடி, சுருட்டை முடி என பல வகைப்படும். இதுவும்கூட பரம்பரை, பரம்பரையாகவே வருகிறது. இந்தியர்களுக்கு பெரும்பாலும் கோரை முடியும், லேசாக சுருண்ட முடியும் உள்ளது. நீக்ரோக்களுக்கும், ஆப்பிரிக்க மக்களுக்கும் கருமையான நன்கு சுருண்ட முடி உள்ளது. அமெரிக்கர், மங்கோலியர்களுக்கு நீண்ட, கோரை முடியே உள்ளது. லேசாக சுருண்ட முடி உலகம் முழுவதும் இருந்தாலும் அவர்களின் எண்ணிக்கைக் குறைவாகவே உள்ளது. முடியின் நிறம், தன்மை, அமைப்பு, உருவம் அனைத்தும் பரம்பரை வழியாக ஜீனின் மூலமே நிர்ணயிக்கப்படுகிறது.

உங்கள் தலையில் மொத்தமாய் எவ்வளவு முடி உள்ளது தெரியுமா? நேரான செம்பட்டை கோரை முடியாய் இருந்தால் 1,40,000 முடிகளும் கறுப்பு, பழுப்பு நிற முடி என்றால் 1,10,000 முடிகளும், சிவப்பு முடி என்றால் 90,000 முடிகளும் இருக்கும்.

முடி வேர்ப்பகுதியிலிருந்துதான் வளருகிறதே தவிர, நாமெல்லாம் நினைப்பது போல் நுனியிலிருந்து வளருவதில்லை. முடியின் நுனியை வெட்டினால், முடி நன்கு வளரும் என்பதும், நன்கு எண்ணெய் தேய்த்தால் முடி வளரும் என்பதும், மூட நம்பிக்கையே. முடி தொடர்ந்து வளருவதில்லை. அதற்கு வளர்நிலை மற்றும் ஓய்வுநிலை என இருநிலைகள் உண்டு. தலையிலுள்ள முடி ஒரு நாளைக்கு சுமாராக 0.35 மி.மீ. நீளமே வளரும். தலையிலுள்ள முடியில் கிட்டத்தட்ட 5 சதம் முடிகள், ஒரே சமயத்தில் ஓய்வு நிலையில் இருக்கின்றன. ஓய்வு நிலை, பொதுவாக ஓரிரு மாதங்களுக்கு மேல் நீடிப்பதில்லை. முடி உதிருதல் என்பது ஓய்வு நிலையின் போதே ஏற்படுகிறது. முடி உதிர, உதிர, புதிய முடி முளைப்பதன் மூலம்தான் தலை வழுக்கையாவதிலிருந்து தப்பித்துக் கொள்கிறோம். வயது முதிர்ச்சியின்போது, ஓய் வெடுக்கும் முடிக் கால்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. பொதுவாக பெண்களுக்கு 'வழுக்கை' ஏற்படு

இந்தியர்களுக்கு பெரும்பாலும் கோரை முடியும், லேசாக சுருண்ட முடியும் உள்ளது. நீக்ரோக்களுக்கும், ஆப்பிரிக்க மக்களுக்கும் கருமையான நன்கு சுருண்ட முடி உள்ளது.

வதில்லை. இதன் காரணம், வழுக்கைக்கான ஜீன்கள், ஒரே ஒரு எக்ஸ் 'குரோமோசோமின் ஒரு பகுதியில் உள்ளதால், ஒரே ஒரு 'எக்ஸ்' குரோமோசோமும், ஒரு 'ஒய்' குரோமோசோமும் உள்ள, ஆண்களிடம் மட்டுமே வெளிப்படுகின்றன. இரண்டு எக்ஸ் குரோமோசோம்கள் உள்ள பெண்களிடம் இதன் பிரதிபலிப்பு குறைவு.



தோலின் மேற்பகுதியிலுள்ள இறந்த செல்கள் தலையிலிருந்து செதிள், செதிளாகக் கொட்டுவதற்கு 'செபோரியஸ்' என்று பெயர். கீழே விழும் செதிள்களுக்குப் பொடுகு என்று பெயர். முடியை அழுக்கடையாமல் சுத்தம் செய்தல் இதனைத் தடுக்கும். பொடுகு அதிகமாக இருந்தால் மருத்துவரை அணுகுதல் நலம்.

நாம் தலையைச் சீவும்போது, குறைந்தது 10 தடவையாவது அழுத்தமாக சீவுதல் அவசியம். அப்போதுதான் மண்டையிலுள்ள தந்துகளில் இரத்த ஓட்டம் அதிகரித்து, தலைமுடிக்கு 'மஸாஜ்' செய்து, தலைமுடி வளர உதவி செய்யும்.

முடியை அடிக்கடி சுத்தம் செய்தலும், சீவுதலும் அவசியம். இதனால் தலையில் பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளின் பாதிப்பைக் கட்டுப்படுத்த முடியும்.

வெயில் காலத்தில் தலையில் கட்டிகள் ஏற்படும். வியர்வை தலையில் தங்கியதால், பாக்டீரியா வளர வசதி செய்துவிடும். இதனால் கட்டி உருவாகி, சீழ்கூட ஏற்பட்டுவிடும். இதில் அரிப்பும், வலியும் இருக்கும். தலையை வியர்க்காமல் வைத்திருத்தல் நல்லது. அப்படியே வியர்த்தாலும், தலையில் வேர்வையின் உப்பும், அழுக்கும் தங்காமல் சுத்தம் செய்தால் பாக்டீரியா வளர வாய்ப்பிருக்காது.

சிலர் சலூனுக்குச் சென்று முடி வெட்டுவதாலும் கட்டி ஏற்படும். சலூனில் கத்தியைச் சுத்தமாகக் கழுவாததினால் ஏற்படும் 'சொறி' இது. இது 'சவரச் சொறி' எனப்படுகிறது. சலூனுக்குச் செல்வதைத் தவிர்த்து, வீட்டிலேயே முடி வெட்டிக் கொண்டால் இது ஏற்படாது. அல்லது கத்திரிக்கோல் மட்டுமே பயன்படுத்தச் சொல்லலாம்.

முடியை அடிக்கடி சுத்தம் செய்தலும், சீவுதலும் அவசியம். இதனால் தலையில் பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளின் பாதிப்பைக் கட்டுப்படுத்த முடியும்.


பேன் மனிதத் தலையில் மட்டுமே வாழும். இதன் உணவு மனித இரத்தம். தலையை நன்கு வாரி, சுத்தமாய் வைத்திருந்தால் பேன் வராது.

பாக்டீரியா, பொடுகு, பூஞ்சை, பேன் போன்றவற்றிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், நல்ல சுகாதார நிலையில் இருக்கவும் ஒவ்வொருவரும் தனித்தனி சீப்பைப் பயன்படுத்த வேண்டும்.

முடி நன்கு வளர பழங்கள், புரோட்டீன் நிறைந்த உணவுப் பொருட்களை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

— **மோகனா**

கோகுலம் நியூஸ்!




* ஜி.எஸ்.எல்.வி.

விண்வெளி சுற்றுலா

இதுவரை விண்வெளிப் பயணம் ஆய்வுகளுக்காக மட்டுமே நடத்தப்பட்டு வந்தது. முதல் முறையாக

* டிட்டோ



விண்வெளி வீரர் அல்லாத ஒருவர் விண்வெளி சுற்றுலாப் பயணம் மேற்கொள்ள அமெரிக்கா அனுமதித்துள்ளது. 94 கோடி ரூபாய் செலுத்தி இந்தப் பயணத்தை மேற் கொண்டவர் அமெரிக்க கோடீஸ்வர வர்த்தகர் டென்னிஸ் டிட்டோ என்பவர். ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் அவரைச் சுமந்து கொண்டு விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றது. டிட்டோவுடன் ரஷ்யாவைச் சேர்ந்த கமாண்டர் டாட் .. முஸாபயேவ், பொறியாளர் யுரிபதுரின் ஆகிய இருவரும் இருந்தனர்.



விருது

உலக செஸ் சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்துக்கு ஸ்பெயினின் லான்சரோட் என்ற உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது. செஸ் போட்டிக்காக முதன் முதலாக இவ்விருதைப் பெரும் பெருமை ஆனந்துக்குக் கிடைத்துள்ளது. சிறந்த சேவை புரிந்தவர்களுக்காக 'ஜேமியே டி ஓரோ' என்ற பெயரில் ஸ்பெயினில் வழங்கப்படும் இவ்விருது தங்கத்தால் செய்யப்பட்டது.



* ஆனந்த்

ஆறாவது இடம்

ஜி.எஸ்.எல்.வி. விண்கலத்தை இந்தியா விண்ணில் செலுத்தியது. இதற்கு முன்புவரை வேறு நாடுகளில் இருந்தே இந்தியாவின் இன்சாட் செயற்கைக் கோள்கள் செலுத்தப்பட்டு வந்தன. ஜி.எஸ்.எல். வி.யை அனுப்பியது மூலம் தகவல் தொடர்பு செயற்கைக் கோள்களை அனுப்பும் திறன் பெற்ற உலகின் ஆறாவது நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பா, சீனா, ஜப்பானை அடுத்து இந்தியா இடம் பெற்றுள்ளது. இம்முறை நாம் அனுப்பிய செய்கைக் கோள், பாதையிலிருந்து நழுவிவிட்டாலும் இந்த அனுபவம் எதிர்கால வெற்றிகளுக்கு அடித்தலமாக அமையும்.

உருவத்தை ரசிக்கும் டால்ஃபின்கள்

கண்ணாடியில் உருவத்தைப் பார்த்ததும் அது 'நாம்தான்' என்று அடையாளம் கண்டு கொள்ளும் அறிவு மனிதனுக்கும் குரங்குக்கும் மட்டுமே உண்டு. இப்போது இந்த அறிவு டால்ஃபின்களுக்கும் உள்ளது என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அமெரிக்காவின் புருக்ளின் நகர மீன் வளர்ப்பு மையத்தில் இரண்டு டால்ஃபின்கள் உள்ளன. இந்த இரண்டின் மீதும் பல்வேறு இடங்களில் அடையாளக் குறியை வைத்து அதைக் கண்ணாடியில் பார்க்கச் செய்தனர். அப்போது அடையாளக் குறி இருக்கும் இடத்தைப் பார்த்துவிட்டு தங்களது உடலில் அந்த அடையாளம் இருக்கும் இடத்தை இரண்டு டால்ஃபின்களும் காண்பித்தன.

SI-LING DISCOVERS SILK
- TRUE STORY

SCRUFFY THE BRAVE HEART
- PETPALS

THE RETURN OF BALLOONITA
A Jayabalan Story

THE KING COBRA
- IN THE WILD

Hrithik Roshan
- POSTER



JUNE 2001
Rs.6/- ONLY

What are Pimples?
- Hello Doctor

KARATE KID
- COVER STORY



GOKULAM
The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097

என்னை...

நான் மளிகைக் கடையில் சாமான் வாங்கச் சென்றேன். எல்லா சாமான்களையும் கட்டி முடித்தபின் ஒரு அட்டைப் பெட்டியில் அடுக்கினார் கடைக்காரர். என்னைப் பார்த்து "என்னெய்யும் உள்ளே வைத்து விடவா?" என்றார். நான் திடுக்கிட்டேன். "வேண்டாம் மாமா. நீங்க பெட்டிக்குள்ளே இருக்க இடமும் இல்லை, என்னாலும் தூக்க முடியாது" என்றேன். அவருக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு சுதாரித்துக் கொண்டு "நான் சொன்னது என்னை இல்லை. எண்ணெய்" என்றார் சிரித்தபடி. நானும் சிரித்து விட்டுக் கிளம்பினேன்.

- ப. காளிதாசன், நீர்விளங்குளம்



இன்னிக்கு என்ன பரீட்சை?

தெரியாதா?

என் தங்கை திவ்யாபாரதி சுட்டிப் பெண். அன்று வகுப்பில் ஒரு கேள்விக்குப் பதில் தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறாள். உடனே இருபது தடவை அந்தப் பதிலை எழுதச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். வீட்டில் அவள் எழுதிக் கொண்டிருக்கும்போது உறவினர் ஒருவர் வந்தார். அவள் என் தங்கையைப் பார்த்து "உன் பெயர் என்ன?" என்று கேட்டார். உடனே அவள் "உங்களுக்குத் தெரியாதா? அப்படின்னா திவ்யா பாரதின்னு இருபது தடவை எழுதுங்க" என்றாளே பார்க்கலாம்! எல்லோரும் சிரித்து விட்டோம். உறவினரிடமும் காரணத்தை விளக்கினோம்.

- பெ. நடராசன், எட்டாம் வகுப்பு, சேதுமாணிக்கம், உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம் மாவட்டம்.



என்ன வரும்?

அன்று விடுமுறை நாள். பக்கத்து வீட்டுச் சிறுவன் என்னிடம் "அண்ணா ஏதாவது விளையாடலாம்" என்று நச்சரித்தான். "ஒரு கணக்குப் போடறேன். சொல்றியா?" என்றேன் நான். அவனும் சரி என்றான். "தரையில் 30 வாழை இலைகள் இருந்தன. கூடையில் 15 வாழை இலைகள் இருந்தன. இரண்டையும் கூட்டினால் என்ன வரும்? சொல்" என்றேன். ஒரு நிமிடம் யோசித்தவன் "இரண்டையும் கூட்டினால் குப்பைதான் வரும்" என்றானே பார்க்கலாம்! அவனுடைய சாமர்த்திய பதிலைக் கண்டு வியந்தேன்.

- க. விக்னேஷ், தூத்துக்குடி




எங்கள் ஊரில் நடந்தது!

சிதம்பரத்தைப் பார்க்க...

நானும் என் தோழியும், சென்னை செல்வதற்காக பஸ்ஸில் அமர்ந்தோம். பஸ் கடலூரரை நெருங்கிக் கொண்டிருந்தது. ஒரு பயணி, திடீரென எழுந்து "கண்டக்டர் சார்! கொஞ்சம் பஸ்ஸை நிற்கச் சொல்லுங்க. நான், சிதம்பரத்தைப் பார்க்க வந்திருக்கேன். காரைக்காலி லிருந்து வர்றேன்!" என்று சொன்னதும், கண்டக்டர் சிரித்தவாறு, அந்தப் பயணியிடம் "பேருந்து இப்போது கடலூரரை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சிதம்பரத்தைப் பார்க்கணும்னா நீங்கள் முன்பே இறங்கியிருக்க வேண்டும்'' என்றார். உடனே பயணி, அவசரமாக, "சார்! என் நண்பன் சிதம்பரம் இங்கு தான் இருக்கிறான். பேருந்தை நிற்க சொல்லுங்க" என்றதும் பஸ்ஸே சிரித்தது.

- ஏ.எல்.பாத்திமா, காரைக்கால்





மோர்

வீட்டில் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தேன். பக்கத்து வீட்டுச் சிறுவனும் வந்து உட்கார்ந்திருந்தான். பெப்சி விளம்பரம் வந்தது. அதில் 'உள்ளம் கேட்குமே மோர்' என்னும் வசனத்தைக் கேட்டுவிட்டு, "இவங்க ஏன் இப்படி பண்றாங்க?" என்றான் சலிப்பாக. எனக்குப் புரியவில்லை. என்னவென்று விசாரித்தால், "உள்ளம் மோர் தானே கேட்குது. இவங்க ஏன் பெப்சியைக் குடிக்குறாங்க? மோரைக் குடிக்க வேண்டியதுதானே'' என்றான். நான் சிரித்துக் கொண்டே "இது தமிழ் மோர் அல்ல. ஆங்கிலத்தில் மோர் என்றால் அதிகம்" என்று விளக்கினேன். தலையாட்டினான்.

- மகேஷ், தாரமங்கலம்

என்ன பரீட்சை?


எங்களுக்கு ஆண்டுத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. நானும் என் நண்பனும் தோட்டத்தில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தோம். அங்கு வந்த ஒருவர் ''தம்பி இன்னிக்கு என்ன பரீட்சை?" என்று கேட்டார். உடனே என் நண்பன் "கத்தரிக்காய் பறிச்சேன், பூசணிக்காய் பறிச்சேன்'' என்று கூறினான். கேட்டவர் எங்களை முறைத்தார். நான் அவரிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு கணக்குப் பரீட்சை என்றேன்.

- ஹ. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம் மாவட்டம்



ஆபத்தான வரம்!

வேணுவாரியத், எம்.மோன்தாஸ்








உடனே ஒரு குரல் எதிரொலித்தது.
விருகாசுரா பொறுமையாக இரு. தலையை வெட்டாதே!
விருகாசுரனுக்கு ஆச்சர்யம். சிவன் அவனுக்குக் காட்சியளித்தார்.
உன் தவம் என்னை மகிழ்வித்தது. என்ன வரம் வேண்டும்?
இறைவா, தாங்கள் கொடுக்கும் வரத்தால் நான் உலகை ஆட்டிப்படைக்க வேண்டும். நான் யார் தலையைத் தொடுகிறேனோ அவர்கள் உடனே இறந்து போக வேண்டும்.
உன் விருப்பப்படியே நடக்கும்.
விருகாசுரன் இரண்டடி முன்னால் வந்தான்.
நான் எனது சக்தியைச் சோதித்துப் பார்க்க வேண்டும்.
நெருங்காதே விருகாசுரா, பின்னால் போ.


ஆபத்தை உணர்ந்த சிவன் சூலாயுதத்துடன் கிளம்பினார்.
இறைவா, சற்று நில்லுங்கள். நான் எனது சக்தியைப் பரிசோதிக்க வேண்டும்.
சிவன் ஓடினார்.
... மலைகள், ஆறுகள், சமவெளி களைக் கடந்தார்.
இறுதியில் மகாவிஷ்ணுவைச் சந்தித்தார்.
மகா பிரபு, எனக்கு உதவுங்கள்... விருகா சுரனிடமிருந்து என் னைக் காப்பாற்றுங்கள்.
கவலை வேண்டாம். அந்த முட்டாளுக்குப் பாடம் கற்பிக்கிறேன்.



சிவனைத் தேடிக் கொண்டு வந்த விருகாசுரன் ஒரு அந்தணரைச் சந்தித்தான்.
ஏன் இப்படி வேகமாகப் போறே?
விருகாசுரன் நடந்ததை விவரித்தான்.
சிவனின் தலையில் கை வைத்து என் சக்தியைப் பரிசோதிக்க விரும்பினேன்.
விருகாசுரா நீ ஏமாந்து போய் விட்டாய். சிவன் உனக்கு வரத்தை உண்மையில் அளிக்க வில்லை. எங்கே அது தெரிந்து விடுமோ என்று தான் ஓடியிருக்கிறார்.
நான் இதை நம்ப மாட்டேன். சிவன் ஒரு போதும் தன் பக்தர்களை ஏமாற்ற மாட்டார்.
நான் எதற்குப் பொய் சொல்ல வேண்டும்? நீயே உன் கைகளைத் தலையில் வைத்தால் தெரிந்து விடப் போகிறது.
இவர் சொல்வதும் சரிதான்.


அதற்குமேல் எதையும் யோசிக்காத முட்டாள் விருகாசுரன் தன் கையைத் தலையில் வைத்தான்.
விருகாசுரன் அந்த இடத்திலேயே இறந்தான்.
முட்டாள் மனிதன். தானே வாழ்க்கையை முடித்துக் கொண்டான்.
உடனே சிவன் அங்கு வந்தார்.
என்ன ஒரு முடிவு!
முன்யோசனை இல்லாததால் ஏற்பட்ட மரணம். தங்கள் வரத்தால் மற்றவர்களை அழிக்க நினைத்தவன் தானே அழிந்து போனான்.

அசைவம் சாப்பிடும் தாவரங்கள்!





மனிதர்களிடையேயும், விலங்கினங்களுக்கு இடையேயும் சைவ உணவு உண்பவர்கள், அசைவ உணவு உண்பவர்கள் என்ற வேறுபாடு உண்டு. தாவரங்கள் பொதுவாக மண்ணில் இருந்தே சத்துகளை உறிஞ்சி, சூரிய சக்தியில் இருந்து ஸ்டார்ச் உணவைத் தயாரித்து உயிர் வாழ்கின்றன.

தாவரங்களில் மாமிசம் தின்னும் இனங்கள் உள்ளன என்பதைக் கேட்டால் வியப்பாக இருக்கிறதல்லவா? மற்ற தாவரங்களில் இருந்து மாறுபட்டு இவை பூச்சி இனங்களின் மாமிசத்தினை உண்டு உயிர் வாழ்வதன் காரணம் என்ன? பூமியில் இருந்து சத்துப் பொருட்களை உறிஞ்சவோ, தாமாக உணவு தயாரித்துக் கொள்ளவோ தகுதியான உடல் அமைப்புகள் இவற்றிடம் இல்லாததுதான் காரணம்.

'பிளாடர் வார்ட்' என்னும் ஒரு நீர்த் தாவரம் ஏரி, குளங்களில் காணப்படும். இதன் வேர்ப் பகுதியில் நீரின் அடியில் விரிந்து நிற்கும் பைகள் போன்ற அமைப்பு உள்ளது. தண்ணீரில் ஊர்ந்து வரும் சிறு பூச்சிகள் இச்செடிகளின் அருகில் வந்து பையைத் தொட்டவுடன் பைகள் மூடிக் கொள்கின்றன. அதன் விளைவாகப் பூச்சிகளின் நிலை பொட்டலத்தில் மடிக்கப்பட்ட பொருள்களைப் போலாகி விடுகின்றது. செடியில் சுரக்கும் சில அமிலங்கள் பையின் உள்ளே மாட்டிக் கொண்ட பூச்சியைக் கரைத்து செரிக்க வைக்கின்றன.

'பிட்சர்' என்னும் ஒரு கொடியினம் மரங்களிலும், புதர்களிலும் படர்ந்து வளர்கின்றது. இதன் இலைகளில் சுரக்கும் ஒருவித வாசனையினால் ஈர்க்கப்பட்டு பூச்சிகள் அவற்றின் மீது வந்து அமர்கின்றன. அமர்ந்தவுடன் இலையில் உள்ள வழுக்குத் தன்மையினால் அதன் தண்டின் நடுவில் உள்ள புனல் போன்ற குழாயில் பூச்சிகள் வழுக்கிச் செல்லப்பட்டுக் கொடியின் அடியில் சென்று அங்கு செரிக்கப்படுகின்றன.

– எஸ். மோகன்ராஜ்,
சீர்காழி.


கூலியைத் திருப்பித் தர முடியாது!

ரஷ்யப் பேரெழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் ஒரு புகை வண்டி நிலையத்தில் நின்று கொண்டிருந்தார். அவரது தோற்றம் ஒரு விவசாயியைப் போல இருந்தது. ஏனெனில் அவர் எழுதும் நேரம் போக மீதி நேரத்தில் வயலில் பாடுபட்டார்.

நின்று கொண்டிருந்த புகை வண்டியிலிருந்த பெண்ணொருத்தி டால்ஸ்டாயைக் கைதட்டிக் கூப்பிட்டாள். "ஐயா! என்னுடைய கணவர் புகைவண்டி நிலைய உணவுச் சாலைக்குச் சென்றார். இன்னும் வரவில்லை. வண்டி புறப்பட்டுவிடும் போலிருக்கிறது. அவரை இங்கே அழைத்து வாருங்கள். உங்களுக்குக் கூலி தந்து விடுகிறேன்'' என்று சொன்னாள். கூடவே, தன் கணவனின் அடையாளங்களையும் விளக்கமாகத் தெரிவித்தாள்.

அவள் தெரிவித்த அடையாளங்களைக் கொண்டு அவள் கணவனை அழைத்து வந்தார் டால்ஸ்டாய். அவள் தந்த கூலிப் பணத்தையும் வாங்கிக் கொண்டார். அவரைக் கூர்ந்து கவனித்த பிறகே அவளுக்கு அவர் டால்ஸ்டாய் என்பது தெரிந்தது. திடுக்கிட்டாள். "டால்ஸ்டாய்! தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள். தங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. கூலியாளாக நினைத்து விட்டேன்'' என்று மன்றாடினாள்.

டால்ஸ்டாய் குலுங்க குலுங்க சிரித்தார். "உங்களுக்கு என் மன்னிப்பே தேவையில்லை. ஆனால் நீங்கள் எனக்குக் கொடுத்த பணத்தை நான் திருப்பித்தர முடியாது. அது நான் உழைத்துப் பெற்றது'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.



* ஐன்ஸ்டீன்

வெறிநாய்க் கடிக்கு மருந்து கண்டவர் லூயி பாஸ்டர். அவரது திருமணம் 1849ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் நாள் காலையில், ஃபிரான்ஸைச் சேர்ந்த 'ஆல்ஸாஸ்லேரைனிலுள்ள 'ஸ்ட்ராஸ் பெர்க்' நகரத்தின் தேவாலயத்தில் நடைபெற இருந்தது.

'ஸ்ட்ராஸ் பெர்க்' நகரத்து சர்வ கலாசாலையின் ரசாயன ஆசிரியர் லூயி

பாஸ்டர். சர்வகலா சாலையின் தலைவர் மான்ஷர் லாரண்டின் என்பவரின் புதல்வியே மணமகள்.

திருமணத்தைக் காண எல்லோரும் வந்துவிட்டார்கள். நேரம் நெருங்கி விட்டது. மணமகளும் தயாராக நின்று கொண்டிருந்தார். ஆனால் மணமகன் லூயிபாஸ்டரைத்தான் காணோம். அவரது வீட்டுக்குப் போய்ப்பார்த்தார்கள். அங்கே அவரில்லை. அவரைத் தேடி, இறுதியாக அவரது ஆராய்ச்சி சாலையில் கண்டு பிடித்தார்கள். "என்ன விஷயம்?"என்று கேட்டார் பாஸ்டர். ''உங்களுக்குத் திருமணமல்லவா இன்று'' என்றார்கள் தேடிச் சென்றவர்கள்.

''அடடா! மறந்தே போனேன் என் திருமணத்தை'' என்று கூறிக் கொண்டு, அவசரம் அவசரமாக மணக் கோலம் பூண்டார் லூயி பாஸ்டர்.

• லூயிபாஸ்டர்



• டால்ஸ்டாய்



விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் ஒரு தடவை புகை வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் பயணம் செய்த வண்டி ஒரு நிலையத்துக்கு வந்து நின்றது.

அந்த நிலையத்தில் வண்டி அதிக நேரம் நிற்கும் என்று அறிந்த ஐன்ஸ்டீன், ஏதாவது சாப்பிட்டு வரலாம் என்றெண்ணி, நிலையச் சிற்றுண்டிச் சாலையை நோக்கிச் சென்றார்.

"சாப்பிட என்ன இருக்கிறது?" என்று பணியாளரைக் கேட்டார்.

பணியாளன் தயாராக இருக்கும் சிற்றுண்டிகளின் பட்டியலை எடுத்து ஐன்ஸ்டீனிடம் நீட்டினான்.

ஐன்ஸ்டீன் தம்முடைய மூக்குக் கண்ணாடியை ரயில் பெட்டியிலேயே வைத்துவிட்டு வந்திருந்தார். ஆகவே, அவர் தமக்கருகே நின்று சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவரிடம், அந்தப் பட்டியலைக் காண்பித்து, "இதில் என்ன இருக்கிறது என்று படித்துச் சொல்லுங்கள்" என்றார்.

அதை வாங்கிப் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்த அந்த மனிதர், "உங்களைப் போலவே எனக்கும் எழுதப் படிக்கத் தெரியாது, ஐயா!" என்று கூறினார்.

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞான மேதையான ஐன்ஸ்டீன், தம்மைப் பற்றிச் சொல்லப்பட்ட அந்த விமரிசனத்தைக் கேட்டுத் தமக்குத்தாமே சிரித்துக் கொண்டார்.

- டி.எஸ்.பாலு, சென்னை.

தெனாலிராமன் இருந்த அரசவையில் ஒரு நாள் அரசருக்குச் சந்தேகம் எழுந்தது. "பூவில் சிறந்த பூ எது?" என்று அனைவரிடமும் கேட்டார். ஒருவர் ரோஜா தான் சிறந்தது என்றார். ஏனெனில் அது வாசனையில் சிறந்தது எனவும், மற்றொருவர் தாமரை தான் சிறந்தது தோற்றத்தில் அழகாகவும் இறைவனுக்குப் பூஜைக்கு உகந்தது எனவும் கூறினர். பலர் பல பூக்களைக் கூறினர். ஆனால் தெனாலிராமனோ, "பருத்திதான் சிறந்த பூ. ஏனெனில் அது அத்யாவசிய தேவையான ஆடைக்குத் தேவைப்படுகிறது. மனித குலத்தின் மானத்தைக் காக்கிறது" என்றார். அரசர் தெனாலி ராமனைப் பாராட்டினார்.

- விஜயகுமார், வேலநத்தம், சேலம் மாவட்டம்



முதல் பரிசு :

பி. சங்கர், அரசினர் உயர்நிலைப்பள்ளி, சித்தரேவு, திண்டுக்கல் மாவட்டம்.

ஓவியப்போட்டி முடிவுகள்



மூன்றாம் பரிசு :

என்.கிருஷ்ணகுமாரி, கோவை.



ஏப்ரல் இதழில் 'நிலா' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.

இரண்டாம் பரிசு :
கே. ரேணுகாதேவி,
புதுப்பாளையம், கடலூர்.



ஆறுதல் பரிசு :
ஜெ. சுகன்யா,
எட்டாம் வகுப்பு, திண்டல்,
ஈரோடு.

ஆறுதல் பரிசு :
வி. பாலாஜி,
ஒன்பதாம் வகுப்பு,
சிறுவள்ளூர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.



குளிர்கால உறக்கம்!

பூமியின் பெரும்பாலான வட பகுதிகளில் குளிர்காலம் கடுமையாக இருக்கும். குளிர்காலம் வந்தவுடன் வட ஐரோப்பாவிலிருந்து சில பறவைகள் பறந்து சென்று விடுகின்றன.


வால்குருவிகள் பல்லாயிரம் கிலோ



மீட்டர்கள் பறந்து தென் ஆப்பிரிக்காவில் குளிர் காலத்தைக் கழிக்கச் சென்று விடுகின்றன. வசந்தகாலம் துவங்கியதும் அவை சொந்த நாடுகளுக்குத் திரும்பி விடுகின்றன. ஆனால் சில பறவைகளும் எல்லா மிருகங்களும் சொந்த நாட்டிலேயே தங்கி விடுகின்றன. அவற்றில் சில ஆழ்ந்த குளிர்கால தூக்கத்தில் மூழ்கி விடுகின்றன.

வெப்பமான நாடுகளில் குளிர்கால உறக்கம் தேவையில்லை. ரஷ்யாவின் வட கோடிப் பகுதிகளில் தரைப்பாகம் கடினமாக உள்ளதால் மண்ணுக்கடியில் உயிரினங்களால் தூங்க இயலாது. ஆனால் பூமியின் வடபகுதியில் பெரும்பாலான இடங்களில் விலங்குகள் குளிர் காலத் தூக்கத்தில் ஈடுபடுகின்றன.

சிவப்பு அணில்கள் மரப் பொந்துகளில் மறைந்து விடுகின்றன. கரடிகள் குகைகளிலும் தவளைகள் சகதிக்கு அடியிலும் பதுங்கி விடுகின்றன. சில மிருகங்கள் பனிக்கு அடியில் தாங்கள் தோண்டிய வளைகளில் ஆழ்ந்து உறங்குகின்றன.




பனித்தூள்களின் ஊடே காற்றோட்டம் இருப்பதால் கதகதப்பாக இருக்கும்.

நாய், பூனை, ஓநாய் போன்ற வெப்ப ரத்தப் பிராணிகள் இவ்வாறு ஆழ்ந்து உறங்குவதில்லை. ஏனெனில் அவற்றின் சுறுசுறுப்பான வாழ்க்கை ரத்தத்தின் வெப்பநிலையைக் கடும் குளிரிலும் சம நிலையில் வைத்திருக்கும். ஆனால் குளிர் ரத்தம் உடைய

பிராணிகள் பனிக்காலம் முழுவதும் ஆழ்ந்து உறங்கிட வேண்டும். ஏனெனில் காற்றின் வெப்பநிலை உறை நிலைக்குக் கீழே போகும்போது அவற்றின் ரத்தத்தின் வெப்பம் மிகவும் குறைகிறது. ஆகையால் வழக்கம் போல் அவற்றால் நடமாட முடியாது. போதுமான அளவு தங்களை வெப்பமாக வைத்துக் கொள்ளவும் தாங்கள் எதிரிகளால் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கவும் அவை தகுந்த இடத்தைத் தேடுகின்றன.

குளிர்காலத் தூக்கம் என்பது சாதாரண தூக்கத்திலிருந்து மாறுபட்ட ஆழ்ந்த தூக்கமாகும். அவற்றின் உடல் வெப்பநிலை 0°Cக்கு சற்றுக் கூடுதலாக இருக்கும். இந்நிலையில் மிருகங்கள் இறந்தவை போன்று தோன்றும். ஆனால் அவை உண்மையில் இறந்து விடுவதில்லை. உடம்பு சில்லென்று இருக்கும். அங்க அசைவுகள் இருக்காது. சுவாசம் மிக மெதுவாக இருக்கும். அவற்றைத் தொட்டாலும் வாலைப் பிடித்து இழுத்தாலும் அவை நகருவதில்லை. தூக்கத்திலிருந்து எழுவதுமில்லை. அவற்றிற்கு எவ்வித வலியும் தெரிவதில்லை.





இந்த ஆழ்நிலை உறக்கத்தில் இருக்கும் பிராணிகளுக்கு உணவு தேவையில்லை. இதற்கு இரு காரணங்கள். ஒன்று, கோடை காலத்திலும், இலையுதிர் காலத்திலும் இவை உண்டு கொழுக்கின்றன. மேலும் ஆழ்ந்த தூக்கத்தில் நடமாட்டம் இல்லாமல் இருப்பதால் உயிரோடு இருக்க மிகக் குறைந்த சக்தியே தேவைப்படுகிறது. இதை ஏற்கனவே உடலில் சேமிக்கப்பட்டிருக்கும் கொழுப்புச் சத்து அளிக்கிறது.

கரடிகள் உட்பட சில பிராணிகள் குளிர்காலம் முழுவதும் இவ்வாறு ஆழ்ந்து உறங்குவதில்லை. ஏனெனில் அவற்றின் உடல்வெப்பம் குறைவதில்லை. கரடிகள் இலையுதிர் காலத்தில் அதிக உணவை உண்டு கொழுத்துவிடுகின்றன. உடல் பருத்து, நீண்ட அடர்ந்த ரோமத்தினால் மூடப்பட்டிருக்கும். நவம்பர் மாதத்தில் இவை மரத்தடிகளிலோ, குகைகளிலோ படுத்துத் தூங்கும். ஆனால் ஆழ்ந்த தூக்கமில்லாமல், வானிலை சற்று கதகதப்பாக இருந்தால் வசந்தகாலம் வந்துவிட்டதாக நினைத்து எழுந்து நடமாடும். பின்பு பனி இன்னும் குறையாமல் இருப்பது கண்டு மீண்டும் தூங்க ஆரம்பித்து விடும்.

பெண் கரடிகள் தாங்கள் ஆழ்ந்து தூங்க குகைகளையே தேர்ந்தெடுக்கும். தரைப்பகுதியை இலை, புற்களால் மூடி கதகதப்பாக்குகின்றன. குளிர்காலத்திற்கு எவ்வளவு உணவை சேமிக்க முடியுமோ அவ்வளவு உணவைச் சேமித்து வைக்கின்றன. குட்டிகளை ஈன்றெடுக்கும் காலமாகிய ஜனவரி வரை அவை ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும். அதன்பிறகும் கூட அவை உறக்கத்திலிருந்து வெளிவர முயற்சிப்பதில்லை. குட்டிகள் குகையிலேயே தாயின் பாலைக் குடித்து பெரியதாகவும், வலுவாகவும் வளரும். பாலூட்டுவது குறையாமல் இருப்பதற்காக பெண் கரடிகள் தாங்கள் மறைத்து வைத்துள்ள உணவை உண்ணுகின்றன.

அணில்களும் சேமிக்கும் பழக்கமுடையன. மரங்களிலுள்ள தங்கள் ரகசிய மறைவிடங்களில் குளிர்காலத் தேவைக்காக கொட்டைகளைப் பதுக்கி வைக்கின்றன.

தொகுப்பு: **து. கார்த்திகேயன்**



விடுமுறையின் அருமை உழைப்பிலே தெரியும்!

கோடை விடுமுறைக்குப் பிறகு ஜூன் மாதத்தில் பள்ளிக்கூடம் போவதில் சில சிரமங்கள் இருக்கத்தான் செய்கின்றன. காலையில் எட்டு மணிக்கு எழுந்து கொட்டாவி விட்டுக் கொண்டே, "அம்மா, காபி!" என்று இனி கேட்கவா முடியும்? விடியும் முன்னரே வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து, பாக்கி உள்ள ஹோம் ஒர்க்கை முடித்து, அள்ளிப் போட்டுக் கொண்டு, அவசரம் அவசரமாக ஓட வேண்டும்! 'இரண்டு மாதங்கள் சுதந்திரப் பறவையாக இருந்தோமே' என்று எண்ணிப் பார்த்தால் ஏக்கப் பெருமூச்சு வரத்தான் செய்யும்.

அப்போது 'நிழலின் அருமை வெயிலிலே' என்ற பழமொழியை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்! விடுமுறையின் ஆனந்தத்தை நாம் உணரச் செய்வதே இதர நாட்களில் நாம் கடமைகளை நிறைவேற்ற மேற்கொள்ளும் கடுமையான உழைப்புதான்! இந்த உழைப்பு இல்லாது போனால், - எல்லா நாட்களுமே விடுமுறைபோல் இருக்குமானால் - விடுமுறைக்கு என்ன மதிப்பு?

முதல் ஓரிரு நாட்கள் பழைய நண்பர்களைச் சந்திப்பதிலும், புதிய யூனிஃபார்ம் அணிந்து, புதுப் புத்தகங்களை மோப்பம் பார்ப்பதிலும் ஓடிப் போய் விடும்! அதன் பிறகு கடுமையான உழைப்பை மேற்கொள்ளுங்கள். 'அப்புறம் பார்க்கலாம்' என்று எதையும் ஒத்திப் போடாதீர்கள். அன்றன்றையப் பாடங்களை அப்போதைக்கப்போதே படித்து, மனத்தில் வாங்கிக் கொள்ளுங்கள். 'இது தான் வெற்றி பெற வழி' என்று வள்ளுவரும் சொல்கிறார்.

அருவினை என்ப உளவோ கருவியாற்
காலம் அறிந்து செயின்.

கருவியால் : செயல்படுவதற்குத் தேவையான கருவிகள் வேணும். பரீட்சையில் பாஸாவதற்கு உங்களுக்குத் தேவைப்படும் கருவிகள் புத்தகம், நோட்டுப் புத்தகம், பென்சில், பேனா... இத்யாதி. இக்கருவிகள் இருந்தால் போதுமா? போதாது.

காலமறிந்து : நேரத்தை உணர்ந்து... வினாடிப் பொழுதும் வீணாக்காமல் பயன்படுத்திக் கொண்டு...

செயின் : செயல்பட்டால், முயற்சி மேற்கொண்டால்...

அருவினை என்ப உளவோ : முடியாத காரியம் என்பதாக ஒன்று உண்டா என்ன? கிடையாது. அவரவருக்கு உண்டான கடமை எதையும் சாதித்துக் காட்டலாம்.

பள்ளிக்கூடம் திறக்கின்ற அந்த முதல் நாளன்று, 'காலமறிந்து செயல்படுவேன்' என்ற உறுதி மொழியை எடுத்துக் கொள்ளுங்கள். அதை ஆண்டு முழுவதுமென்ன, ஆயுள்முழுவதுமே கடைப்பிடியுங்கள்!

- ஆசிரியர்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



பள்ளியில் அனைவரையும்
விரல் நுனியில் ஆட்டிப்
படைக்கிறேன்!!
பயமூட்டும்
விரல்
பிராங்கிஸ்!
FREE!
PRANKIES
Rasna
ORANGE
NEW
Rasna
RICHER
THICKER
TASTIER
ORANGE
NEW

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2000'
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

